# MY COMPUTER 9

சித்திரை 2009 இதழ் 09

தமிழ் கணினி சஞ்சிகை

www.mycomputertamil.info



# கணினி வைரசுகளில் இருந்து மீளமுடியாதா?







# கூகிள் வலையில நீங்கள் எங்கள் வலையில மீன்கள்!



Rs 40/=


வெளியீடு:

SPEED IT NET

"The Quick way to Online" www.speeditnet.com

# முடிந்தால் வெல்லுங்கள் -08

(1)E mail என்பதன் தமிழ் பதம் என்ன?
(2)உலகின் முதல் இணையத்தளம் எது?
(3)விக்கி பீடியாவின் நிறுவனர் யார்?
(4)LGA என்பதன் விரிவு என்ன
(5) பென் டிறைவர் F எனில் Format செய்ய DOS கட்டளை என்ன?

உங்கள் விடைகள் எம்மை வந்தடைவதற்கான இறுதித்திகதி : *10.06.2009*

## முடிந்தால் வெல்லுங்கள் -07 இற்கான விடைகள்

1.define:computer 2.md newfoldername 3.Universal Resource Locator
4. விசைப்பலகை 5. யாகூ

## பரிசை வெல்லும் வெற்றியாளர்கள்

5 வினாக்களுக்கும் சரியான விடைகளினை அனுப்பி குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்டு 6 மாத சந்தாவை வெற்றிகொள்ளும் அதிஸ்டசாலி

**எஸ் தஜீவனி**
**இராமகிருஷ்ணா வீதி கோணடாவில் கிழக்கு கோண்டாவில்**

இவருக்கும் சரியான விடைகளை எழுதியோருக்கும் பாராட்டுக்கள். உங்களுக்கான 6 மாத இதழ்கள் வருகின்ற 10 வது வெளியீட்டில் இருந்து அனுப்பி வைக்கப்படும்.

---

**சந்தா விபரம்(தபால் செலவு இலவசம்!)**

My Computer உங்கள் வீடுதேடி வர வேண்டுமா? உங்கள் முழுப்பெயர் ,முகவரி தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் சந்தாக்கட்டணத்தினை திருநெல்வேலி தபாலகத்தில் மாற்றக்கூடியதான காசுக்கட்டளையாகவோ அன்றி த.தவரூபன் என்ற பெயருக்கான காசோலையாகவோ அனுப்பிவையுங்கள் நேரில் அலுவலகத்திலும் பதிவுசெய்யலாம்.விண்ணப்பங்கள் யாவும் எமது ஆசிரியர் பீட (யாழ்ப்பாணம்) முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்

**ஒருவருடம் (12 இதழ்கள்) : 480 ரூபா ,6மாதம்(6 இதழ்கள்) : 240 ரூபா**

---

**விளம்பர கட்டண விபரம்**

My Computer இல் விளம்பரம் செய்ய கட்டண விபரம் இதோ
நாடு முழுவதிலுமிருந்து விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

| | முழுப்பக்கம் | 1/2 பக்கம் | 1/4 பக்கம் | 1/8 பக்கம் |
|---|---|---|---|---|
| பின் அட்டை (4 கலர்) | ரூ 8000 | ரூ 4000 | - | - |
| உள் அட்டை(1 கலர்) | ரூ 5000 | ரூ 3000 | ரூ 2000 | ரூ 1 000 |
| உள்பக்கம் (கறுப்புவெள்ளை) | ரூ 3000 | ரூ 2000 | ரூ 1000 | ரூ 500 |

# My Computer

"நமக்காக நாமே"

தமிழ் கணினிச்சஞ்சிகை

சுவடி -3 ஓலை- 9 வைகாசி 2009 பக்கங்கள்:40



புதுவரவுகள் Page 03-06
- மைக்ரோசொப்ட் பேருந்து
- Flash Band
- மினி டிஜிற்றல் கமரா
- சகலகலா மவுஸ்
- தண்ணீரில கைத் தொலைபேசிகள்
- கீபோர்ட்டையும் கழுவலாம்?

அறிவியல் Page 07
- ரோபோ விஞ்ஞானி தயார்?
- மின் குண்டு

மருத்துவம் Page 08
- உடலுக்குள் ஏவுகணை

கணினிப்பாவனை Page 31-34
- Optical Drivers
- ஹார்ட்டிஸ்க்கை பாதுகாக்க.......

எதிர்கால தொழிநுட்பம் Page 10-12
- 3G யுடன் மடிக்கணினிகள் ?
- சொலிட் ஸ்ரேற் டிஸ்க்
- கணினியும் கடவுள் தானா

அடிப்படை தகவல் தொழில்நுட்பம்
- மதர்போர்ட் மர்மங்கள்? Page 28

இணைவோம் இணையத்தில் Page 14
- SLT யின் Prepaid இணைப்பு

இணையப்பக்கங்கள் Page 22-27
- Street View சங்கடங்கள்
- ஓபின் கோர்ஸ் வெயார்
- புதிய தேடுபொறி 'கூல்' அறிமுகம்
- குழந்தைகளுக்கான இணையம்
- FaceBook.com

புதிய வைரஸ்கள் Page 17

கொம்யூட்டரஜீ யின் பதில்கள் Page 20-21
- காணொளிகளைத் பதிவிறக்க வழி?
- அழித்த பைல்களைத் திரும்பப் பெற
- System Restore என்றால் என்ன?
- புளூ ஸ்கிறீன் வருகிறதே?
- 16 kbps இல் Connected?

மென்பொருள் Page 35-40
- விண்டோஸ் 7
- Jet Audio 7
- Word மந்திரங்கள்
- விசுவல் பேசிக்



அனைத்து தொடர்புகளிற்கும்: 021 222 8358 /0214 591871

My Computer , 72/28, பணிக்கர்லேன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

SMS1: 0777563213
SMS2: 0602021500
மின்னஞ்சல்:
mycomputer@speeditnet.com
இணையத்தளம்:
mycomputertamil.info

ஆசிரியர்: த.தவரூபன்
thava@speeditnet.com

வெளியீடு: SPEED IT NET
Web: speeditnet.com

Print By Harikanan Printers

## கின்னஸ் சாதனை!

வாசகர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்! மைக்கொம்யூட்டர் சஞ்சிகையின் 9வது இதழை கண்டதும் நீங்கள் அடைந்துள்ள மகிழ்ச்சியினை இதனை எழதும்போதே உணர்ந்து கொண்டேன் எப்போதும் ஆசிரியர் தலையங்கம் எழுத முன்பாகவே என்னவெல்லாம் இம்முறை இதழில் சேர்க்கப்பட்டிருக்கும் என்பதை தீர்மானித்து விடுவேன் எனவே ஒருவாசகர் என்ன உணர்வு பெறமுடியும் என்பதை முன்கூட்டியே உணர்ந்து கொள்ளலாமில்லையா?



மாதசஞ்சிகையாக மலர்ந்த எமது வெளியீடு இலக்கங்களின் பெயரால் அறியப்பட்டு கடந்த ஆண்டு ஆவணிமாதம் ஒருவருடநிறைவில் 8வது இதழை வெளியிட்டு காணாமல் போயிருந்தது. அன்றில் இருந்து இன்றுவரை ஏதோ ஒரு காரணத்திற்காக தடைப்பட்டு தடைப்பட்டு இன்று மீண்டும் 9 வது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி.

கடந்த 8 மாதங்களும் மைக்கொம்யூட்டர் வாசகர்களுக்கு நான் போக்குக்காட்டியதே ஒரு கின்னஸ் சாதனை எனலாம். என்னுடைய இடத்தில் இருந்து பாரத்தால் தெரிந்திருக்கும் தொலைபேசி அழைப்புக்கள் மின்னஞ்சல்கள் நேரடித்தொல்லைகள் என 9வது இதழை எப்படியாவது வெளியிட்டே ஆகவேண்டிய கட்டாய நிலைக்கு என்னை தள்ளின. வாசகர்கள் எந்தளவிற்கு சஞ்சிகை மீது விருப்பு வைத்துள்ளார்கள் என்பதற்கு இது சான்று.சென்ற ஆண்டு ஆவணியில் யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற ஓராண்டு நிறைவு விழாவிலும் கருத்தரங்கிலும் கலந்து கொண்ட அனைத்து வாசகர்களுக்கும் எனது நன்றிகள்.கருத்துரையாளர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். விழாவிற்கு வருகைதந்து 8வது இதழை வெளியிட்டு வைத்த ஐஜஎஸ் நிறுவன இயக்குனர் திரு விக்னேஸ் அவர்களுக்கும் நன்றிகள் விழாவினை நடாத்த துணைநின்ற யாழ் நகர்மைய றோட்டரக்ட் கழகத்தினருக்கு விசேட நன்றிகள்


நிறைய சொல்லவேண்டும் செய்யவேண்டும் என அவா இருந்தாலும் எனது நிறுவன நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்தவேண்டியிருப்பதனாலும் வேலைப்பழு காரணமாகவும் இயலாமல் உள்ளது அவ்வப்போது இயன்றவற்றினையாவது சஞ்சிகைமூலம் வழங்கிட முயற்சிக்கின்றேன். எமது வாசகர்களிடத்தில் உள்ள தெரியாமை என்ற பெரிய ஆமையினை விரட்ட முயற்சிக்கின்றேன்.ஆரம்பத்தில் கொழும்பிலும் வெளியிட முயற்சி எடுத்திருந்த போதிலும் முடியாமல் போய்விட்டது. தற்போது முதலாவது இதழில் இருந்து அங்கே மீள்பதிப்புக்கள் வர ஆரம்பித்து உள்ளது. அந்த வகையில் இலங்கையின் ஒரெயொரு கணினிச்சஞ்சிகையாக மைக்கொம்யூட்டர் உருவெடுத்துள்ளது.


விரைவில் சகலரையும் அடுத்த இதழில் நிகழ்கால நிஜங்களுடன் சந்திக்கும் சந்தர்ப்பத்தினை எதிர்பார்த்து

அன்புடன்
தவா

# பேருந்தில் ஏறினாலேயே வேலை ஆரம்பம்?

இது மைக்ரோசொப்ட் பேருந்து பற்றிய செய்தி எமது வாசகி அருந்தா மின்னஞ்சலில் அனுப்பிவைத்த செய்தி! எம்மால் உறுதிப்படுத்தப்பட்டது! கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 29ம்திகதி மைக்ரோசொப்டினால் தனது பணியாளர்களுக்காக பேருந்து சேவை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கிறது. பேருந்தில் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் கணினிவலைப்பின்னலுடன் வயர்லெஸ் முறையில் இணைக்கப்பட்ட உள்ளக வலைப்பின்னலில் ஒவ்வொரு இருக்கையின் முன்னாலும் கணினிகள். வேலையாட்கள் பேருந்தில் ஏறியவுடன் அவர்களின் வேலைநேரம் ஆரம்பித்துவிடும் பக்கத்தில் இருப்பவர்களுடன் லொள்ளு விட்டவாறே வேலை செய்யலாம்! கேட்க நன்றாயிருக்கின்றதல்லவா?





**மைக்ரோ சொப்ட் பணியாளர்களுக்காக நிறுவனம் ஒழுங்கு செய்துள்ள பேருந்தில் பணியாளர்கள் வேலை செய்தவாறே அலுவலகத்திற்கு பயணிக்கும் காட்சியிது**

ஓம் இப்படியே செய்திகளை மட்டும் கேட்டு கொட்டாவிவிட்டவாறே நம்மட காலம்போகுது!

நம்ம நாவலர் வீதியிலேயே போக்குவரத்து நெரிசல் கூடியிருக்க அமெரிக்காவில் மட்டும் என்னவாம்! அதிகரித்துவிட்ட போக்குவரத்து நெரிசல் தமது வேலையாட்களுக்கு ஒரு தடைக்கல்லாக இருந்துவிடக்கூடாது என்பதற்காக பில்கேற்சின் நிறுவனம் செய்த மாற்று ஏற்பாடுதான் இது. இப்படி இருந்தால்தானே உலகின் முதல் பணக்காரனாக முடியும் ! பில்கேற்ஸ் செய்தது நல்ல காரியம் தான். பிரச்சனைக்கான காரணத்தினை பற்றி பெரிதும் அலட்டிக்கொண்டிராமல் தீர்வு காண்பதே மேல் என நிரூபித்துள்ளார் நம்மூர் றோட்டில் இப்படி ஒரு பேருந்து போவதாக கற்பனை செய்வோம் விசைப்பலகையில் கையினை வைத்திருந்தாலே போதும் விசை அழுத்தல்களை வழியில் உள்ள பள்ளம் பிட்டிகளே பார்த்துக்கொள்ளும்?


## கையில் அணியக்கூடிய பென் டிறைவ்




ஆரம்பத்தில் flash ஐ பத்திரப்படுத்தி கொண்டு சென்ற காலமெல்லாம் மலையேறி விட்டது. தற்போது கொண்டு செல்வதில் சிக்கலே இல்லை. இளைஞரின் விருப்பிற்கும் நவநாகரீகத்திற்கும் ஏற்ற வகையில் band ஆகவும் அதே வேளை flash ஆகவும் பயன்படுத்தலாம்.

## நீங்கள் விரும்பியவற்றை கிளிக் செய்யும் மினி டியிற்றல் கமரா




சுற்றுலா செல்ல ஆசையா? கமரா வைக்க இடம் போதவில்லையா? படம் சேமிக்க கமராவில் இடம் போதவில்லையா? கவலையே வேண்டாம். விரும்பியவற்றை கைக்குள்ளேயே வைத்து கிளிக் செய்யலாம். தேவையேற்படும் போது Laptop அல்லது கணனியில் நேரடியாக சேமிக்கலாம். கமரா பொருத்துவதற்கான வயர்களே தேவையில்லை.

# கீபோர்ட்டையும் கழுவலாம்?


தகவல் தந்தது : அருந்தா



உங்கள் கணினியின் விசைப் பலகையில் தூசு செல்கிறதா? தினமும் தூசு துவட்ட கடினமாக உள்ளதா? இனி துடைப்பமோ தூரிகையோ தேவையில்லை. ஒரு கோப்பை தண்ணீரே போதும். இதோ அறிமுகமாகிவிட்டது கண்ணாடியிலான கழுவிப்பயன் படுத்தும் Keyboard இந்த வகை விசைப் பலகையில் விசைகள் இல்லை. இதில் சிறிய கமரா போன்ற அமைப்பு பொருத்தப் பட்டுள்ளது. எமது கைவிரல்களின் அசைவுகளை அவதானித்து அதன் படி எழுத்துகளை இனங்கண்டு ரைப் செய்யும். கிட்டத்தட்ட தொடுதிரை விசைகள் போலத்தான்

## 2 in One

குழப்பமே வேண்டாம். உங்கள் keyboard க்குள்ளேயே உங்களுக்கு தேவையானவற்றை வைக்கலாம்.



---

## காசநோய் விழிப்புணர்வுக்கு புதிய இணையத்தளம்


வடமாகாண காசநோய் தடுப்புச்சங்கத்தினரால் உலக காசநோய்தினமான மார்ச் 24 இல் தமிழ் மொழிமூல காசநோய் விழிப்புணர்வு இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வைத்திய கலாநிதி சி.யமுனானந்தாவின் முயற்சியில் ஆரம்பிக்கப்பட்ட இத்தளத்தினை ஸ்பீட் ஐரி நெட் நிறுவனத்தினர் வடிவமைததுள்ளனர். முகவரி www.tuberculosisjaffna.com




# சகலகலா மவுஸ்

Eizo Nanao Corp நிறுவனம் கணினியில் உபயோகிக்கப்படும் மவுஸ் எனப்படுகின்ற சுட்டியினை தொலைக்காட்சியை கட்டப்படுத்தும் சாதனமாக உபயோகிக்கக்கூடிய வகையில் தயாரித்துள்ளது. இதனுடைய இரண்டு மேற்பரப்புக்களும் ஒவ்வொரு செயற்பாட்டுக்காக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு பக்கம்

*தகவல் தந்தது : தவா*



மவுசாகவும் மறுபக்கம் தொலைக்காட்சி இயக்கியாகவும்(றிமோட் கொன்ரோல்) பயன்படுத்தப்பட முடியும். இது கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் வெளியிடப்பட்டபோது விலை ரூபா 13000. மவுஸ் இயக்குவதற்கு கணினியில் USB றிசீவர் ஒன்று பொருத்தப்பட்டிருக்க வேண்டும் 10 மீற்றர் தூரத்திற்குள் கணினியினை வைத்திருக்க முடியும் தொலைக்காட்சி இயக்கிப்பக்கத்தில் 9 பொத்தான்கள் காணப்படும் சனல் மாற்றவும் ஒலி கட்டுப்பாட்டுக்கும் மவுஸ் பகுதியே உதவும்.தொலைக்காட்சி இயக்கி பக்கத்திற்கு திருப்பியதும் மவுஸ் இனது செயற்பாடுகள் துண்டிக்கப்படும் வகையில் அது வடிவமைக்கப்பட்டிருக்கிறது. சாதாரண மவுஸ் இனை 500 ரூபா கொடுத்து வாங்கவே தயங்கும் நாம் 13000 கொடுப்பதா?

# தண்ணீரில் இயங்கும் கைத் தொலைபேசிகள்




Samsung நிறுவனம் புதியவகைக் கைத்தொலைபேசிகளைத் தயாரித்துள்ளது. இத் தொலைபேசிகள் சிறப்பு யாதெனில், இவற்றின் பற்றரிகளைத் தண்ணீரில் மீள் மினனேற்றம் செய்துகொள்ள முடியும். இத்தகைய தொலைபேசிகளை 2010ல் சந்தைப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. தண்ணீரில் வைத்தே மினனேற்றம்(சார்ஜ்) செய்யப்படும் இத்தகைய தொலைபேசிகள் தொடர்ச்சியாகப் பத்துமணிநேரம் வரை பாவிக்க முடியுமென , இதன் தயாரிப்பாளர்களான சாம்சுங் நிறுவனத்தினர் தெரிவிக்கின்றனர். இத்தகைய தொலைபேசிகள் பாவனைக்கு வந்துவிட்டால், தவறித் தண்ணீரில் விழுந்த தொலைபேசியை பதறியடித்துத் தூக்க வேண்டியிராது.

# ரோபோ விஞ்ஞானி தயார்?

என்ன! ரோபோ மனிதன் என்று தானே கேள்விப்பட்டோம். இப்போ விஞ்ஞானியும் ரோபோவா? என நீங்கள் வாயைப் பிளக்கலாம். நமது விஞ்ஞானிகளும் மனிதர்கள் தானே அவர்கள் எவ்வாறு விஞ்ஞானிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு விஞ்ஞான ரீதியின் முடிவுகளை எடுத்து ஆராயும் அறிவு உள்ளதால் அவர்களை விஞ்ஞானிகள் என்கிறோம். அதே போல் அந்த அறிவைப் பெற்ற ரோபோக்களை ரோபோ விஞ்ஞானி என அழைப்பதில் தவறில்லை தானே.

இரண்டு ஆராய்ச்சிக்குழுவினர் தாம் விஞ்ஞான ரீதியான அறிவைக் கொண்ட முடிவுகளை மேற்கொள்ளக்கூடிய பரிசோதிக்கும் அறிவுடைய ரோபோ இயந்திரத்தை உருவாக்கியிருப்பதாக அறிவித்துள்ளன. இந்த இயந்திரங்கள் இரசாயனவியல் மாற்றங்களை ஆராய்ந்து முடிவுக்கான காரணங்களினைத் தெரிவிக்கின்றனவாம். அத்தோடு மட்டுமல்லாமல் அடுத்த பரிசோதனைக்கும் தன்னைத் தயார்படுத்திக் கொள்கிறதாம். இதனை வேல்ஸ் Aberystwyth



பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளதாம். இதனுடைய பெயர் அடம் (Adam).


அடுத்து Eve என்ற ரோபோ இது நோய்களுக்கான புதிய மருந்துகளைத் தேடுவதற்கான வேலையில் ஈடுபடுகிறதாம். இதேபோல நியுயோர்க் Cornnel பல்கலைக்கழகம் ஒரு கணினி மென் பொருளைத் தயாரித்துள்ளது. அந்த மென்பொருள் பௌதீகவியல் சட்டங்கள் சமன்பாடுகள் போன்றவற்றினை சிறப்பாக கையளுகின்றது. நியூட்டனின் விதியைக்கூட சிறப்பாக மொழிபெயர்க்கிறதாம். உலகில் சனத்தொகை கூடிக் கொண்டிருக்கின்றது என்று கூறப்பட்டுக் கொண்டிருக்கிற வேளையில் ரோபோக்களும் அதிகரித்த வண்ணமுள்ளன. கடைசியில் இயந்திரத்துக்கும் மனிதனுக்கும் இதில் சண்டை ஏற்பட்டாலும் வியப்பில்லை. அவர்கள் கூட தனிப்பிராந்தியம் கேட்கக்கூடும்?.

## விமானங்களை விழுத்த புதிய பொறிமுறை : மின்-குண்டு

மனிதன் ஆக்கும் ஒவ்வொன்றுக்கும் அவனே அழிவையும் தேடிக்கொள்வது பூமியில் ஒன்றும் புதிதல்ல. அந்த வகையில் விமானங்களை செய்து பறக்கவிட்ட மனிதன் அவற்றை அவனின் அழிவுக்கும் பயன்படுத்த வெளிக்கிட்டு, தானே தயாரித்த விமானங்களை தானே சுட்டு வீழ்த்தவும், வெடிக்க வைக்கவும் பொறிமுறைகளை கண்டுபிடித்தான். அந்த வகையில் விமானங்களை சுட்டு வீழ்த்த விமான எதிர்ப்பு துப்பாக்கிகள், ஏவுகணைகள் மற்றும் விமானங்களை தகர்க்க குண்டுகள் என்று பல ஆபத்தான பொருட்களையும் மனிதனே கண்டுபிடித்து தனக்குத்தானே அழிவுகளை ஏற்படுத்திக் கொண்டும் இருக்கிறான். இப்போ அதிநவீனமாக மைக்குரோ அலைகள் (Micro waves) எனும் சக்திவாய்ந்த மின் காந்த அலைகளை (Electro magnetic waves) பிறப்பிக்கும் சாதனங்களை உருவாக்கி அதன் மூலம் விமானத்தில் உள்ள இலத்திரனியல் சுற்றுக்களை செயலிழக்க வைத்து விமானங்களை வீழ்த்தும் பொறிமுறைகளை அமெரிக்காவும் ரஷ்சியாவும் தயாரித்து வைத்துள்ளன. இது கொஞ்சம் பழைய சமாச்சாரம். புதிய விடயம் என்னவென்றால் இத்தொழில்நுட்ப ரகசியங்கள் இணையத்தளம் வாயிலாக கிடைக்கப் பெறுவதால் அவற்றைப் பயன்படுத்தி தீவிரவாதிகளும் விமானங்களை வீழ்த்த இத்தொழில்நுட்பத்தை பயன்படுத்தலாம் என்ற அறிவிப்புத்தான். எனி வரும் காலத்தில் விமானப் பயணிகள் இலத்திரனியல் உபகரணங்களை (கையடக்கத் தொலைபேசிகள் உள்ளடங்க) கையில் எடுத்துச் செல்வதில் கூட தடை வரலாம் என்பதாகவே இவ்வறிவுப்பு கட்டியம் கூறுகிறது. தானே ஆக்கி அவற்றைக் கொண்டு தானே தன்னை அழிக்கும் இயல்பு மனிதனை தவிர வேறேதற்கு உண்டு..??!

# iPILL இல் Doctor -உடலுக்குள் ஏவலாம் ஏவுகணை ?


(News Source: Reader Digest -தமிழில் தவா)



iPhone கேள்விப்பட்டிருப்பீர்கள் இது என்ன iPILL? தொழில்நுட்பம் எதில்தான் புகுந்து விளையாடாமல் விட்டது இந்த வகையில் மருத்துவத்துறையில் ஏற்படுத்தப்படவிருக்கும் ஒரு புதுமைக்கு கட்டியம் கூறும் வகையில் வெளிவந்துள்ள இனிப்பான செய்தி. இது உலகின் முன்னணி இலத்திரனியல் நிறுவனமான பிலிப்ஸ் இடமிருந்து வந்துள்ளது. இந்நிறுவனம் வருடாந்தம் 800 மில்லியன் டொலர்களை உயிரியல் மருத்துவம் சம்பந்தமான ஆராய்ச்சிகளுக்கு செலவிடுகிறது. இதுவல்ல அந்த இனிப்பானசெய்தி அது வேறு

நாம் அன்றாட வாழ்வில் நோய் பாதிப்புக்கு உள்ளாகும்போது மருத்துவரின் ஆலோசனையின் பேரிலும் ஏன் அதிகப்பிரசங்கிகளாக நாமே வைத்தியர்களாகவும் மருந்தகங்களை நாடுகின்றோம். தரப்படும் மருந்துகளில் பெரும்பாலானவை குளிகைகள் தான் இதனை Tablets/Pills என்கின்றோம் மருந்துகளில் பெரும்பாலானவை வாய்வழியே உண்கின்றோம் சிலர் ஏதோ இட்டிலியை விடுங்குவதுபோல அரைக்கிலோ மருந்துக் குளிகைகளை ஒரே தடவையில் முழுங்கி விடுவார்கள் சிலர் ஒன்றையே ஒருமணித்தியாலம் வைத்திருந்து ஒருவாறு உள்தள்ளி மறுகணமே வாந்தியும் எடுப்பார்கள். இப்படி பல்வேறுவிதமான அனுபவங்கள்! இவ்வாறு உள்ளெடுக்கும் மருந்துகள் எங்கே போகின்றன உணவுக்கால்வாய் வழியாக இரைப்பையினை அடைகின்றன இங்கிருந்து குருதிவழியாக உடலெங்கும் கடத்தப்படுகின்றன இவ்வேளை தேவைப்படும் இடங்களில் அவை உபயோகமாகின்றன. பொதுவில் உடற்கூறில் ஒரு இடத்தில் உள்ள பிரச்சனைக்காக பல இடங்களினூடாக பயணம்செய்தே மருந்துகள் அடையவேண்டி உள்ளது.இதன்காரணமாக இரைப்பையில் பெரும்பகுதி மருந்துகள் சமிபாடடைந்து புஸ்வானமாகி விடுகின்றன. எஞ்சியவை போகும் வழிகளில் தாக்கங்களுக்குட்பட்டு உரிய இடத்திற்கு செல்லும்போது அதனுடைய திறனில் 75 வீதத்தினை தொலைத்து விடுகின்றன.

அது மட்டுமா போகுமிடங்களில் உள்ள கலங்களை கூட துவசம் செய்துவிடுகின்றன அதன்காரணமாக ஒவ்வொரு மருந்தினாலும் ஏற்படும் பக்க விளைவுகளுக்கும் பஞ்சமில்லை. ஒரு கலத்தை அழிக்க அனுப்பிய மருந்து அதனோடு சேர்த்து வேறுசிலவற்றையும் கூட அழித்துவிடுவதுண்டு. மருந்தை விழுங்குபோதும் சிலவேளைகளில் அவை போகும் பாதைகளில் உள்ள கலங்களில் பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றன.




இன்னும் சிலவருடங்களில் இந்நிலை இல்லாது போய்விடும் சாத்தியம் ஏற்பட்டிருக்கிறது. ஆளில்லா விமானங்களை கேள்விப்பட்டிருக்கிறோம் ஆளில்லா விண்கலங்களை எங்கோ இருக்கும் செவ்வாய்கிரகத்திற்கு அனுப்பியிருக்கின்றோம் அவற்றினை பூமியில் இருந்து கணினி வழி கட்டுப்படுத்துகின்றோம் அப்படியிருக்க நமது உடலுக்குள் இலத்திரனியல் குளிகை களினை ஏன் அனுப்பமுடியாது இலக்கை நோக்கி துல்லியமாக ஏன் நகர்த்த முடியாது என விஞ்ஞானிகள் எண்ணியதில் தப்பில்லைதானே!

ஆம் இப்போது உங்களுக்கு சற்றுபுரிந்திருக்கும் குறித்த இலக்கை அடைவதற்காக சிறப்பாக மருந்துடன் வடிவமைக்கப்பட்ட இலத்திரனியல் குளிகையினை உடலுக்குள் அனுப்பி குறித்த இலக்கை எட்டியதும் மருந்தை வெளிப்படுத்தினால் எப்படி இருக்கும் பக்கவிளைவு இருக்காது இலக்கு துல்லியமாக எட்டப்பட்டிருக்கும் இதைத்தான் iPILL என்று அழைக்கிறார்கள் இதனைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கும் பிலிப்ஸ் நிறுவனத்தினர் இவர்களுடைய ஆராய்ச்சி வழமைபோலவே மிருகங்களுக்கு சாத்தியப்பட்டிருக்கிறது. மனிதர்களில் மிக விரைவில் செய்யப்போகிறார்கள். குறிப்பாக இது புற்று நோய்க்கலங்களை அழிப்பதற்கு பெரிதும் பயன்படும் என கூறப்படுகிறது

iPILL இனுள் மருந்து மற்றும் PH Sensor, Thermo meter ,Microprocessor ஆகியவை காணப்படும். உள்ளிருக்கும் Microprocessor இல் இருந்து ரேடியோ Transmitter மற்றும் அன்ரெனா மூலம் வெளியில் கொண்டுசெல்லப்படும் pH மற்றும் வெப்ப தரவுகளினை கணினிமூலம் வைத்தியர்கள் அவதானிப்பார்கள் இது குறித்த iPILL மீதான கட்டுப்பாட்டை கொண்டிருப்பதற்கும் திசைமாறாமல் குறித்த இலக்கினை அடைவதற்கும் வழிசெய்கிறது. உள்ளிருக்கும் Fluid Pump ஆனது மருந்தினை குறித்த இடத்தில் இலாவகமாக வெளியேற்ற உதவிசெய்யும். வாழ்க iPILL ஒழிக புற்றுநோய்!

# 3G-யுடன் மடிக்கணினிகள் ?

நமது பிரதேசத்தில் எது இல்லையோ அதை தேடிப்பிடித்து கட்டுரையாக தருவதே உங்கள் வழமையாகிவிட்டதே என நீங்கள் விசனம் தெரிவிக்கலாம். அதற்காக புதிய விடயங்களை அறியாமல் இருப்பதா? எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருப்போம் பாவனைக்கு வந்தால் பார்த்துக்கொள்வோம் முன்பெல்லாம் GPRS என்கின்ற பெயரில் கைத்தொலைபேசிகளில் "எங்கிருந்தாலும் இணையம்" வசதியை பெற்றிருப்பீர்கள். அதை 2.5G என்பார்கள். இப்போது அதே GPRS இன்னும் ஒரு படி முன்னேறி 3G எனும் பெயரில் வந்திருக்கின்றது. அட்டகாச வேகம் நீங்கள் எங்கிருந்தாலும் கிடைக்கும் குறிப்பாக நகரங்களில்.

வீட்டிலும் விமானநிலையத்திலும் நீங்கள் Wi-Fi பயன்படுத்தினால் வழியில் நீங்கள் 3G பயன்படுத்தலாம். வீடியோ கூட சிக்கலின்றி தொடர்ச்சியாக பார்த்துக் கொண்டே பயணிக்கலாம். எங்கிருந்தாலும் இணையம் கிடைக்குமென்றால் அது 3G. அங்கிருந்தால் மட்டுமே இணையம் கிடைக்குமென்றால் அது Wi-Fi. இப்போதைக்கு இந்த 3G வசதி கைத்தொலைபேசிகளில் மட்டுமே இருந்து வருகின்றது. அதுவும் "ஸ்மார்ட் ஃபோன்கள்" எனப்படும் நொக்கியாவின் N வரிசைபோன்கள், ஆப்பிளின் ஐபோன்கள், RIM-ன் பிளாக்பெர்ரிகளில் இதைக் காணலாம்.

ஏறக்குறைய ஒரு கணிணியின் வேலையையே முழுதாக செய்யும் இந்த ஸ்மார்ட்போன்களை நாம் கணிணியாகவே கணித்தோமானால் இன்றைக்கு உலகின் முதல்தர கணிணி தயாரிப்பாளார் இடத்துக்கு நொக்கியா வந்துவிடுவார். அதை அடுத்துதான் HP,Dell வந்து மீண்டும் நான்காம் இடத்தை அப்பிள் பிடிக்கும். மடிக்கணிணியை கண்டு பிடித்த டொசீபா-வே 7 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டு விட்டது என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். ஏற்கனவே கைத்தொலைபேசிகளில் இருக்கும் கமராக்களை கணக்கில் கொண்டால் உலகில் அதிக அளவு கமெரா தயாரிப்பாளர் என்ற பெயர் நொக்கியாவிற்கே போய்விடுகின்றது. இந்த 3G வசதியை சீக்கிரத்தில் மடிக்கணிணிகளும் தன்னகத்தே கொண்டு வெளியாகும் என



எதிர்பார்க்கப்படுகின்றது. சந்தைகளில் ஏற்கனவே இத்தகைய மடிக்கணிணிகள் Note Book கள் இருக்கலாம். இதனால் போகுமிடமெங்கும் அதிவேக இணைய இணைப்பு உங்கள் மடிக்கணிணியில் இருந்து கொண்டே இருக்கும். ஆனால் அங்கும் ஒரு சிம் கார்டு போட வேண்டி இருக்கும்? இலங்கையில் இது போல போகுமிடமெல்லாம் இணைய இணைப்பு வேண்டுமானால் இப்போதைக்கு சில சேவைகள் உள்ளன. Mobitel , Dialog Airtel ஆகிய மூன்று நிறுவனங்களும் 3G இணைய இணைப்பினை அறிமுகப்படுத்தியுள்ளன. ஆயினும் யாழ்ப்பாணத்தினை பொறுத்தவரை டயலொக் மற்றும் மொபிற்றல் நிறுவனங்கள் தான் சேவையில் உள்ள போதிலும் GPRS மற்றும் 3G இணைய சேவைகள் தடைப்பட்டுள்ளன கண்காட்சி ஒன்றிற்காக தற்காலிகமாக தொழில்பட்ட இச்சேவைகள் தற்போது செயலிழந்த நிலையில் உள்ளன நாட்டின் ஏனைய பாகங்களில் உள்ள இச்சேவை இங்கு எப்போது அனுமதிக்கப்படுமோ தெரியவில்லை

மேற்சொன்ன 3G இணைய இணைப்பினை கொண்ட SIM அட்டையினை பயன்படுத்தி கணினினியிலும் இணைய இணைப்பினை பெற முடியும் இதற்கு குறித்த மொபைல் போன் இனை கணினியுடன் கேபிள் ஊடாக இணைக்க வேண்டும் அல்லது SIM அட்டை போடக்கூடிய GPRS/3G Modem சாதனம் ஒன்று வாங்கி அதனுடாக கணினியில் இணைய வசதி பெறமுடியும்.

# சொலிட் ஸ்டேட்(Solid State Drive/SSD) டிஸ்க்




தற்போது பரவலாக அறிமுகமாகி வரும் சொலிட் ஸ்டேட்(Solid State Drive/SSD) டிஸ்க், ஹார்ட் டிஸ்க்கின் வடிவமைப்பையும் செயல்பாட்டினையும் ஓரம் தள்ளிவிடும் என்று அனைவரும் கணித்துள்ளனர். இந்த ஹார்ட் டிஸ்க் பற்றி இதோ சில தகவல்கள்.

உண்மையில் இந்த சொலிட் ஸ்டேட் டிஸ்க் என்பது பென்டிரைவரினை போன்றது வெறுமனே செமிக்கொண்டக்ரர் மற்றும் சிப் களை கொண்டு அமைக்கப்பட்டது. சாதாரண ஹார்ட் டிஸ்க் களில் தரவுகளை சேமிக்க டிஸ்க்குகள் பயன்படகின்றன ஆனால் இங்கு அப்படி இல்லை. அப்படியானால் பென் டிறைவரினை சொலிட் ஸ்டேட் டிஸ்க் என்று கூறலாமா? இல்லை இவை அந்த தொழில் நுட்பத்தில் அமைந்தாலும் கணினிக்கு வெளியில் பயன்படுத்தப்படுகின்றவை. ஆனால் இந்த சொலிட் ஸ்டேட் டிஸ்க் கள் கணினிக்குள் ஹார்ட் டிஸ்க் இற்கு பதிலாக பயன்படுத்தப்படக்கூடியவை அத்துடன் ATA மற்றும் SATA துறைகளை கொண்டு கணினியுடன் இணையக்கூடியவை. சாதாரண ஹார்ட் டிஸ்க் வடிவத்தில் அமைந்தவை ஆனால் பென்டிறைவரின் தொழில் நுட்பத்தில் உருவானவை

இவற்றின் சிறப்பியல்புகளாக குறைந்த மின்சக்கி பயன்பாடு,கூடிய தரவுப்பரிமாற்ற வேகம் மற்றும் நீண்ட பாவனைத்தன்மை போன்றவற்றினை குறிப்பிடலாம். இவற்றின் விலைதான் அதிகம் மேலும் இவற்றின் கொள்திறனும் இன்னும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளது. சொலிட் ஸ்டேட் டிஸ்க் கள் பற்றிய தொழில் நுட்பத்தகவல்களை இன்னும் விரிவாக இன்னுமொரு கட்டுரையில் பார்ப்போம்

ஆரம்பத்தில் எல்லாமே அவ்வாறுதான் இருக்கும் போகப்போக நமது கணினிகளிலும் தற்போதய ஹார்ட் டிஸ்க் இற்கு பதிலாக சொலிட் ஸ்டேட் டிஸ்க் கள் ஒட்டிக்கொண்டுவிடும்

---

32ம் பக்க தொடர்ச்சி

## Optical Drivers.......


தற்காலத்தில் Light Scrip CD/ DVD கள் வெளிவருகின்றன., இதனை Light scrip வசதி கொண்ட DVD Writer களில் பயன்படுத்த முடியும். இதில் நன்மை என்னவெனில் DVD/ CD யில் அடித்ததும் (எழுதியதும்) அதனால் ஏற்படுகின்ற வெப்ப வெளியீட்டின் துணைகொண்டு CD/ DVD யின் மறுபக்கத்தில் Lable ஐ Print செய்வதாகும். ஆயினும் நிறப்படங்களை அப்படி Print செய்ய முடியாது. மெல்லிய Gray நிறத்தில் எழுத்துக்களில் Print செய்ய முடியும். இதனை நீங்கள் Light scrip வசதி கொண்ட DVD/CD கொண்டு தான் செய்ய முடியும். இந்த Drive வாங்கும்போது ஒரு CD யில் இதற்கான மென்பொருள் தரப்படும் அதனை உபயோகித்து Lable களை வடிவமைக்கலாம்.


Re Writeable வசதி இல்லாத CD/ DVD யில் மீள மீள Write செய்ய முடியும் .எப்படி ? மென்பொருளில் Write செய்யும்போது தோன்றும் Wizard இல் "Allow files to be added later" என்ற தெரிவை மேற்கொள்ள மேற்கொள்ள வேண்டும் அப்படியானால் அதிலே மீதமுள்ள பகுதியில் பின்னர் Write செய்ய முடியும். ஆயினும் அழித்து Write செய்ய முடியாது. உபயோகித்த இடம் மீள வராது.


# கணினியும் கடவுள் தானோ?

-பி.கே.பி

**நிகழ்காலத்தில் நிகழ்ந்துவரும் சில கண்டுபிடிப்புகளை பற்றி கேள்விப்படும் போது நமக்கு தலையே சுற்றிக் கொண்டு வரும் போலிருக்கின்றது. அதிலும் நம்மட ஆட்கள் கலக்குகின்றார்கள் என அறியும் போது இன்னும் இரட்டிப்பு சந்தோசம்.**



ஒரு புத்தகக்கடைக்கு சென்றிருக்கின்றீர்கள் என வைத்துக்கொள்வோம். ஒரே விசயத்தை சொல்லிக்கொடுக்க மூன்று வேறு புத்தகங்கள் அலமாரியில் உள்ளன. இதில் எதை தெரிந்தெடுப்பது என நீங்கள் குழப்பமடையலாம். இணையமிருந்தால் பலரின் புத்தகவிமர்சனத்தையோ அல்லது சிபார்சுகளையோ பார்த்து ஒரு முடிவுக்கு வரலாம். இணையவசதி கொண்ட கையடக்க தொலைபேசியை தட்டித் தட்டி அந்த மூன்று புத்தகங்களைப் பற்றிய தகவல்களையும் அறிந்து கொள்வதற்குள் விடிந்து விடும். அதற்கு பதிலாக நீங்கள் அந்த புத்தகத்தை கையில் எடுத்ததுமே உங்கள் உடம்பிலிருந்து புறப்படும் ஒரு ஒளிக்கற்றை அப்புத்தகத்தை பற்றிய விவரத்தை அப்புத்தத்திலேயே ஸ்கிரீனிட்டு காட்டினால் எப்படி இருக்கும்? அப்படியே அந்த ஸ்கிரீனை தட்டித் தட்டி வேறெங்காவது விலை குறைவாக இப்புத்தகம் கிடைக்குமாவெனவும் பார்க்கமுடிந்தால்..

பேருந்தில் செய்தித்தாளை படித்துக் கொண்டிருக்கின்றீர்கள். புதுப்படம் ஒன்று வெளிவந்திருக்கிறதாம். ரெயிலர் பார்க்க ஆசை....பூம்....மீண்டும் உங்கள் உடம்பிலிருந்து அனுப்பப்படும் அந்த ஒளிக்கற்றை YouTube இல் டிரயில்லரை தேடி அந்த செய்திதாளிலேயே வீடியோவாக காட்டும்.வியப்பாக உள்ளதா?

கடிகாரம் கையில் இல்லை என வைத்துக்கொள்வோம்.நேர வலயம் மாறி வேறு நாட்டில் வந்திறங்கியிருக்கின்றீர்கள். ...பூம்... மீண்டும் உங்கள் உடம்பிலிருந்து அனுப்பப்படும் அந்த ஒளிக்கற்றை கையில் கடிகாரம் போல் ஒரு வட்டம் வரைந்தால் போதும் கைக்கடிகாரம் உங்கள் கையில் ஒரு ஒளிவட்டமாகத் தோன்றும். இப்படி இணைய கணினி மயப்படுத்தலை விசைப்பலகை இன்றி ஒளித்திரையின்றி அன்றாட பொருட்களின் மேல் செய்ய முனைந்திருக்கின்றார்கள். அங்கு உங்கள் உடம்பிலிருந்து புரஜெக்ட் ஆகும் ஒளிக்கற்றையே திரை. உங்கள் விரல்

அசைவுகளே தகவல் உள்ளீடும் கருவி. கமராவெல்லாம் வேணாம். விரல்களை கட்டமிட்டு காண்பித்தாலே படம் கிளிக்காகி விடும். கைத்தொலைப்பேசியும் வேணாம். கையிலேயே எண்களை புரஜெக்ட் செய்து காட்டி எண்களை தட்டி கோல் செய்யலாம்.

படங்களை பார்த்தாலே புரியும். ஒன்றும் புரியவில்லையா இந்த வீடியோவை ஓட விட்டுப்பாருங்கள். புரியலாம்.

http://www.youtube.com/watch?v=nZ-VjUKAsao குஜராத்தில் BE-யும் மும்பை IIT யில் MDes -ம் முடித்து விட்டு மேற்கே பறந்த பிரனாவ் மிஸ்டிரி(Pranav Mistry) MIT யில் இப்போது செய்துவரும் இந்த புராஜெக்டின் பெயர் SixthSense. மேலதிக தகவல்களுக்கு http://www.pranavmistry.com/projects/sixthsense

23 ம் பக்க தொடர்ச்சி

## FaceBook.com.........

MySpace,Orkut,Wayn,Hi5 போன்றன. ஆங்கிலத்தில் இவை Social Networking Sites என்று பொதுப்படையாக அழைக்கபடுகின்றன. Facebookஇன் நேரடிப்போட்டியாளர் என்று கருதப்படும் அளவுக்கு உள்ளவர் Myspace. உலகளாவிய ரீதியில் அதிகம் பயன்படுத்தப்படுகிற இணையத்தளங்களில் Myspace இருப்பது 6ஆம் இடத்தில். எனினும் ஏனைய எல்லா சமூக நட்பு இணையதளங்களையும் விட Facebook பாதுகாப்பானதும் சமூகப் பொறுப்பு வாய்ந்ததும் என்று கருதப்படுகிறது. காரணம் Facebook இறுக்கமாகக் கடைப்பிடிக்கும் சொந்தப் பெயர் (சுயபெயர்) பாவனைக் கொள்கை தான்! இதன்மூலம் பாலியல் குற்றங்கள் சட்டவிரோத செயல்கள் போன்ற தகாத நடவடிக்கைகள் அதிகளவில் தவிர்க்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதேபோன்று நிர்வாணப்படங்கள் தகாத பிரச்சாரங்கள் போன்றனவும் Facebook இல் கூடுமானவரை தவிர்க்கப்படுகின்றன.

மறுபக்கம் Facebook இல் எவ்வளவுதான் விதிகள் இறுக்கமாக இருந்தாலும் பலவிதமான பாலியல் நடவடிக்கைகள் நடந்தவண்ணமே உள்ளன. யுத்தம், இனஅழிப்பு நடவடிக்கைகளுக்கெதிராக மற்றும் பல விழிப்புணர்வு விடயங்கள்,அறிவூட்டல் சமாச்சாரங்கள் இன்னும் எவ்வளவோ விடயங்களுக்காக பிரயோசனமான பல Groups இருந்தாலும் கூட பாலியல் விளையாட்டுக்களுக்கென்றும் ஒரு கூட்டம் அலைகிறது. நீங்களோ உங்கள் சகோதரர்கள் பிள்ளைகளோ இவ்வாறான Facebook,Myspace,Hi5,Orkut போன்றவற்றின் பாவனையில் ஈடுபடும்போது ஆழ்ந்துபோகாமலும் அடிமையாகாமலும் பார்த்துக்கொள்ளுங்கள்.தேனி கொட்டும் என்பதற்காக தேன் எடுக்காமல் விட்டார்களா?

Facebook இல் இணையும் போது உங்கள் மின்னஞ்சல் முகவரியே username ஆக பயன்படுத்தப்படும் அதற்காக கடவுச்சொல் கேட்கப்படும்போது ஒருபோதும் உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கான கடவுச்சொல்லை கொடுக்கவேண்டாம். அவ்வாறு கொடுத்தால் உங்கள் அனுமதியின்றியே உங்கள் மின்னஞ்சல் நண்பர்கள் அனைவருக்கும் உங்கள் சார்பாக அழைப்பு அனுப்பப்படும். மேலும் உங்கள் FaceBook கணக்கு தாக்குதலுக்குள்ளானால் மின்னஞ்சல் முகவரியும் பாதிக்கப்படும் எனவே கடவுச்சொல் விடயத்தில் கவனமாக இருங்கள் இந்த அவதானம் Face Book இற்கு மாத்திரமல்ல எல்லாவற்றுக்கும் பொருந்தும்

தற்போது நம்ம டயலொக் நிறுவனமும் FaceBook உடன் தொடர்பை ஏற்படுத்தித் தருகிறது இதன்மூலம் உங்கள் FaceBook நண்பருடன் குறுஞ்செய்தி சேவையூடாகவே இணைந்து கருத்துப்பரிமாற்றம் மற்றும் நிலை மாற்றங்களை குறுஞ்செய்தியாக பெறக்கூடிய வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது

-தவா இன்ரநெற் எனும் இணையம் - 08

# SLT யின் Prepaid இணைய இணைப்பு

கடந்த சஞ்சிகைகளில் கணினியில் தொலைபேசியினைப் பயன்படுத்தி எவ்வாறு Dialup இணைய இணைப்பை ஏற்படுத்துவது என தெளிவாக குறிப்பிட்டிருந்தேன்.

எனினும் பல வாசகர்களிடத்தில் இதில் மயக்கம் இருந்து கொண்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. எனவே அவர்களுக்காக இவ்விடயத்தில் மீண்டும் கவனம் செலுத்துவோம்.மைகொம்யூட்டர் 5 மற்றும் 6 ம் இதழ்களில் இது பற்றி கதைத்திருந்தோம்.

## உங்களிடம் SLT யின் கேபிள் தொலைபேசி இருந்தால் எப்படி உங்களிடம் கணினியில் இணைய இணைப்பை ஏற்படுத்தலாம்?

உங்கள் கணினியில் MODEM நிறுவப்பட்டிருக்க வேண்டும். இது இரண்டு தொலைபேசி வயர் பொருத்துமிடங்கள் (RJ12) கொண்ட ஒரு Card ஆகும். கணினியில் CPU இணைப்பின் பிற் பகுதியை அவதானியுங்கள். கணினியில் கிடையாக PCI Slot இல் இருந்து பொருத்தப்பட்டிருக்கும். இல்லையெனில் சுமார் ரூபா 1000 இற்கு வாங்க முடியும். இதனை வாங்கி பொருத்திய பின் அதற்குரிய Driver இனையும் கணினியில் நிறுவவேண்டும். MODEM வாங்கும் போது கிடைக்கும் CD யினை கணினியில் இட்டு நிறுவிக் கொள்ளலாம். எப்படி ? புதிய மொடத்தினை கணினியிலிணைத்து கணினியை மீளியக்கம் செய்ய Hardware இனை கண்டுபிடித்து அதற்கான Driver இனை கேட்டு ஒரு சாளரம் தோன்றும். இவ்வேளை Driver CD யினை இட்டு Next இனை அழுத்தி நிறுவலாம்.

## ஏற்கனவே MODEM காணப்படின் அதற்குரிய Driver நிறுவப்பட்டிருக்கிறதா என எப்படிப் பரிசோதிப்பது?

மைகொம்யூட்டரில் வலது கிளிக் செய்யும் போது தோன்றுகின்ற மெனுவில் Properties இல் கிளிக் செய்க. அப்போது தோன்றும் சாளரத்தில் Hardware என்ற Tap இனை கிளிக் செய்க. பின்பு அதிலே Device Manager என்ற Button இனை கிளிக் செய்க. தோன்றும் சாளரத்தில் MODEM என்ற Driver தெரிகிறதா? என அவதானிக்கவும். அதிலே MODEM களுக்கான Driver நிறுவப்பட்டிருக்கும். இல்லையெனில் குறித்த MODEM இற்கான Driver இனை கணினி நிறுவனமொன்றில் இருந்து அல்லது இணையத்தினூடாகப் பெற்று Other Devices என்ற பகுதியில் மஞ்சள் நிறத்தில் காணப்படுகின்ற PCI Communication controller என்பதில் வலது Click செய்து Update Driver என Click செய்வதன் மூலம் CD யிலிருந்து அல்லது கணினியில் உள்ளிருந்தோ Driver களை நிறுவிக் கொள்ளலாம். MODEM கணினியில் நிறுவியாகிவிட்டது.

## இனி என்ன செய்வது?

தொலைபேசிகளுடன் வரும் வயரினைக் கழற்றி நேரடியாக கணினியிலுள்ள MODEM இல் Line துளையினுள் பொருத்தவும். இதன்போது உங்கள் தொலைபேசி செயலிழந்து விடும். உங்கள் தொலைபேசி செயலிழக்கக் கூடாது எனக் கருதினால் மொடத்தின் Phone துளையிலிருந்து தொலைபேசிக்கு இன்னுமொரு சிறு துண்டு வயரினூடாக இணைப்பினை ஏற்படுத்தலாம். சில தொலைபேசிகளில் இரண்டு துளைகள் இருக்கும். அப்படியாயின் தொலைபேசிகளுக்குரிய இணைப்பைத் துண்டிக்காமல் தொலைபேசியில் இருந்து அடுத்த




:: New Users: Click Here to Register

துளையினூடாக வயரினை எடுத்து MODEM இன் Line துளைக்கு இணைக்க முடியும். இதற்காக இரு துளை கொண்ட (அடொப்ரர்)இணைப்பான்களினையும் பயன்படுத்த முடியும்.

சரி தொலைபேசியை கணினியுடன் இணைத்தாகிவிட்டது. இனி என்ன செய்வது? இணைய இணைப்பை ஏற்படுத்துவதற்கான Dialup Connection இனை உருவாக்க வேண்டும். இதற்கு மை கொம்யூட்டரின் 6 வது இதழில் 18 ம் பக்கத்தில் கூறப்பட்ட முறையைப் பின்பற்றவும்.

சரி Control பனலூடாகச் சென்று அல்லது My Network Place ஊடாகச் சென்று Dialup Connection இனை உருவாக்கி விட்டீர்கள். இனி இணைய இணைப்பை ஏற்படுத்த வேண்டியது தான்.

இணைய இணைப்பை ஏற்படுத்த வேண்டுமாயின் Prepaid / Post paid இணைப்பினது UserName ,Password அவசியமல்லவா? அதனை எப்படிப் பெறுவது? 6 வது இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அது பற்றி சற்று விரிவாகப்பார்ப்போம்.

இந்த Prepaid / Post paid இணைப்பினைப் பெறுவது CDMA / கேபிளூடாக இணைய இணைப்பை ஏற்படுத்த முயலும் சகலருக்கும் பொருந்தும்.உங்களுக்குத் தெரியும் Prepaid என்பது முன்னரேயே பணம் செலுத்தப்பட்ட இணைய இணைப்பு என்று. என்றாலும் இதனைப்பயன்படுத்தி இணையப்பயன்பாடு செய்யும் போது ஏற்படும் தொலைபேசி அழைப்பு கட்டணம் உங்கள் தொலைபேசி மாதாந்தக் கட்டணப்பட்டியலில் சேர்க்கப்படும் எனினும் இந்தக் கட்டணம் மிகமிகக்குறைவு.

Postpaid என்பது இன்ரநெற்றுக்கென பிறிதாக மாதாந்தக் கட்டணமாகக் கட்டி பெறப்படும். இணைப்பாகும் இதனை அண்மையில் உள்ள ரெலிக்கொம் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கும் மாதாந்தம் தனியான மாதாந்தக் கட்டணப்பட்டியல் அனுப்பப்படும். இதிலே 30 மணித்தியாலம் 60 மணித்தியாலம் என Package கள் உண்டு. இவை எத்தனை மணித்தியாலங்கள் இணையபாவனைக் கட்டணம் இலவசம் என்பதை குறித்து வேறுபடும். மேலதிக மணித்தியாலங்களுக்கு கட்டணம் அறவிடப்படும். எது எப்படியிருந்த போதிலும் இதற்கும் அழைப்புக்கட்டணம் இருக்கும். அது தொலைபேசிக் கட்டணப்பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கும்.

Prepaid மூலம் எப்படி இணைய இணைப்பினை ஏற்படுத்துவது? ஏற்கனவே கணக்கு உருவாக்காதவர்கள் http://www.pre.sltnet.lk என்ற முகவரிக்கு செல்லவேண்டும்

இணைய இணைப்பின்றி எவ்வாறு இணையத்தளத்திற்கு செல்வது? தலையைப்பிய்த்துக்கொள்கிறீர்களா? Dia up Connection இற்கான Shortcut இனுாடாக username ஆக netguest எனவும் கடவுச்சொல்லாக guest எனவும் இட்டு 1250 இற்கு டயல் செய்யுங்கள் இணைய இணைப்பு கிடைக்கும் ஆயினும் இதன்போது மேற்குறித்த ரெலிகொம் இணையத்தளத்திற்கு மட்டுமே செல்ல முடியும்.

இனி Register for new Account என்ற தொடுப்பை கிளிக்செய்தால் படம் 1 இல் காட்டிய பக்கம் தோன்றும் அதிலே நிங்கள் வாங்கி வைத்திருக்கும் SLT Net card இல் உள்ள PIN மற்றும் Serial இலக்கங்களை இட்டு புதிய கணக்கினை ஆரம்பிக்கலாம் பின்னர் இணைய இணைப்பினை துண்டித்து விட்டு உங்கள் புதிய கணக்கின் username இனையும் கடவுச்சொல்லையும் பயன்படுத்தி username அக username@pre.sltnet எனவும் கடவுச்சொல்லாக நீங்கள் கொடுத்ததையும் பயன்படுத்தி 1250 என்ற எண்ணுக்கு டயல் செய்து இணைப்பை ஏற்படுத்தலாம் உதாரணமாக நிங்கள் கொடுத்த username ஆனது thava எனில் thava@pre.sltnet என பயன்படுத்தவேண்டும்

ஏற்கனவே கணக்கு உருவாக்கியுள்ளவர்கள் கணக்கு மீதி அறியவும் மீள்நிரப்பல் செய்யவும் மேற்படி இணையத்தளத்திற்கு சென்று username ஆக வெறுமனே username (உ-ம் thava)இனை இட்டு கடவுச்சொல்லையும் இட்டு உள்நுழையலாம் இங்கே Service என்ற தொடுப்புக்குள் சென்றால் எவ்வளவு பணமீதி என்பதை பார்க்கலாம். Recharge என்ற தொடுப்பினுள் சென்றால் மீள்நிரப்ப முடியும்

உங்கள் தொலைபேசி CDMA எனில் Dial செய்யவேண்டிய இலக்கம் #777 என்பதை மறக்கவேண்டாம். இத்தொலைபேசியில் இலவச இணைய இணைப்பு பெற netguest@pre.sltnet என்பது username ஆகவும் guest என்பது கடவுச்சொல்லாகவும் பாவிக்கப்படவேண்டும்

கேபிள் தொலைபேசியூடாக இணைய இணைப்பினை ஏற்படுத்துவோருக்கு பலவேளைகளில் இணைப்பு வேகம் 16kbps ஆக இருக்கிறது இதனால் இணைப்பு மெதுவாக இருக்கும் இதற்கு நீங்கள் செய்யவேண்டியது உடனடியாக இணைப்பை துண்டித்துவிட்டு 1250 இற்கு பதிலாக 0112474747 அல்லது 0112383838 என்ற இலக்கங்களில் ஒன்றினுாடாக டயல் செய்யவேண்டியது தான்

1250 இற்கு பதிலாக 1289 என டயல் செய்தால் இணையத்திற்கான அழைப்பு கட்டணம் உங்கள் Card இல் இருந்தே கழியும். 1255 இற்கு டயல் செய்தால் வேகமான இணைப்பு கிடைக்கும் ஆனால் இதற்கான பாவனைக்கட்டணம் அதிகமாகும். கட்டணவிபரங்கள் மற்றும் பிரச்சனைகளுக்கு 1243 என்ற இலக்கத்திற்கு அழைத்து உதவி கேட்கலாம்.

## Google Chrome - *புதிய இணைய உலாவி...*

இணைய உலகின் இணையற்ற(?) தேடல் பொறியான Google தனது சொந்த இணைய உலாவியை (BETA பதிப்பு) வெளியிட்டுள்ளது. Google Chrome எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த உலாவியானது, இதுவரை காலமும் கோலோச்சி வரும் Microsoft நிறுவனத்தின் Internet Explorer க்கு நேரடிப் போட்டியாக விளங்கப் போகிறது. Google Chrome ஆனது மற்றைய உலாவிகளை விட பாதுகாப்பானதாகவும் வேகமானதாகவும் இருக்கும் என்று சொல்கிறது Google நிறுவனம். தரவிறக்கிப் பார்க்க ஆர்வமுள்ளவர்கள் : www.google.com/chrome

# புதிய வைரஸ்களும் தீர்வுகளும்

–தவா

**அண்மைக்காலமாக நமது பிரதேசத்தில் கணினிப் பாவனையாளர்களுக்கிடையே இனங்காணப்பட்ட வைரஸ்கள் பற்றியும் அவற்றுக்கு நாம் தரும் தீர்வுகள் பற்றியும் விரிவாக அலசுவோம்.**

நாம் தொடர்ந்தும் McAfee Enterprise 8.5i இனையே சிபார்சு செய்து வந்திருக்கின்றோம். மை கொம்யூட்டர் சஞ்சிகையிலும் இது பற்றியே விளக்கமாகக் கூறி வந்துள்ளோம். யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரை எமது அப்டேற்றினை பயன்படுத்திக் கொள்பவர்களின் வீதம் அதிகரித்துள்ளது. நாம் இலவசமாகவே அப்டேற்றின்னை வழங்கி வருகின்றோம். McAfee Enterprise 8.5i பற்றியும் அதன் உபயோகம் பற்றியும் ஒவ்வொரு மை கொம்யூட்டர் இதழிலும் குறிப்பிட்டு வந்துள்ளோம். 6 வது இதழில் 16 வது பக்கத்தில் மிகத் தெளிவாகத் தெரிவித்துள்ளோம்.

கடந்த பல மாதங்களாக எமது இதழ் வெளி வராத காரணத்தால் புதிய வைரஸ்கள் பற்றிய தெளிவு வாசகர்களாகிய உங்களிடத்தில் ஏற்படுத்த முடியாமல் போய்விட்டது என்று எம்மிடம் வராத பயனாளர்களுக்கும் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டவர்களுக்கும் எமது தீர்வுகள் அவ்வப்போது வழங்கி வந்துள்ளோம்.

இடைப்பட்ட காலத்தில் சிறு Tool களையும் வெளியிட்டு இணையத்தில் http://virus.speeditnet.com இனூடாக புதிய வைரஸ்கள் பற்றிய எமது தகவல்களைத் தெரிவித்து வந்துள்ளோம். எனினும் இவ்விதழில் அவற்றினைப்பற்றி விரிவாக எழுதுகிறோம். அது உங்களுக்கு மேலும் பலனளிக்கும் என நம்புகிறோம்.

வைரஸ் கருவிகளாக பெரிதும் பயன்படுவது Pen Driver களே என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அந்த வகையில் பலருடைய Flash Drive களில் "samith1.vbs" எனும் வைரஸ் Script உலா வருகிறது. இவையுள்ள Pen Driver களினை ஒரு கணினியிலிட்டு Double Click செய்து Open செய்தால் அந்தக் கணினியினுள் இந்த Script வைரஸ் இறங்கிவிடும்.

### *இறங்கினால் என்ன செய்யும்?*

கணினியிலுள்ள Startup setting இல் Internet Explorer இணைய உலாவியில் Homepage இனை smslanka.info என்ற இணையத்தளமாக மாற்றிவிடும். அத்துடன் Internet Explorer இல் Title பட்டையில் Hack By Samith என்று வரச் செய்து விடும். அத்துடன் wscript.exe எனப்படுகின்ற விண்டோசின் script Programme இனை run செய்து விட்டுக் கொண்டிருக்கும். இதன்போது இந்தக் கணினியில் யாராவது Flash Drive இனை செருகினால் அவ்வளவுதான். அதிலே samith1.vbs என்ற கோப்பினையும் Autorun.inf என்ற கோப்பினையும் பிரதி செய்து அடுத்த தாக்குதலுக்கு அந்த Pen Driver னை தயார் செய்து விடும். இது பாதித்த கணினி மிகவும் மெதுவாகவே இயங்கி வரும்.

## இதனை நீக்குவது எப்படி?

இதுவரை Script File ஆகும். இதனை உருவாக்கி விட்டது. என்பதை விட உலவ விட்டது. ஒரு சிங்கள நபர் தான். அவர் பெயர்தான் Samith. இந்த வைரஸினை சிலநாள் முன்வரை McAfee தானாகப் பிடிப்பதில்லை. அதற்கு நாம் தான் வைரஸ் என அறிவிக்க நேரும். இதற்கு McAfee இல் System tray button இல் வலது கிளிக் செய்து Virus Scan Console Click Unwanted Programs Policy DoubleClick User Defined Detection Click Add Click என்ற வழியே சென்று samith1.vbs என ரைப் செய்து OK செய்து விடவும்.

இது இனிமேல் வராது தடுக்க வழி அப்படியாயின் வந்ததை நீக்குவது எப்படி? அதற்கு Speed IT net நிறுவனத்தார் ஒரு Tool இனை வெளியிட்டுள்ளனர். அதன் பெயர் SpeedVirusKiller 2. இதனை www.Vempady.com/Download/ இல் சென்று பதிவிறக்கம் செய்து Double Click செய்த பின்பு அதில் Open Task Manager பட்டனில் Double Click செய்ய Task Manager தோன்றும். அதில் Process Tap இல் Click செய்து அதிலே wscript.exe என்ற பெயரைத் தெரிவு செய்ய வேண்டும். (samith இனால் பாதிக்கப்பட்ட கணினியில் இது காணப்படும்)பின்பு End Process இனை Click செய்ய வேண்டும். பின்பு Task manager இனை மூடிவிட்டு Speed Virus Killer 2 இனை Open செய்து அதில் அதிலே Samith 1 script Remover இனை Click செய்தால் சரி. பிரச்சனை தீர்ந்தது.
இதன் போது உங்கள் Homepage ஆக Googletamil.com எனும் IE இல் Title ஆக By SPEEDITNET என்று வரும். இது பின்னர் மாற்றப்படலாம்.

## _Zimmer_ வைரஸ்

இதுவும் ஒரு வைரஸ் தான். இது பாதிக்கப்பட்ட கணினியின் Driver கள் எழுத்துக்கள் மாறியிருக்கும். இதிலே செருகும் Pen Driver களின் Lable களும் _Zimmer_ என மாறிவிடும். பின்னர் அந்த Pen Driver இனை இன்னொன்றில் செருகி Double Click செய்து Open செய்தால் அந்த கணினியிலும் வைரஸ் புகுந்து விடும்.

இந்த வைரஸ் உங்கள் கணினியிலிருந்து விரட்டுவதாயின் மேற்குறிப்பிட்ட Speed Virus Killer 2 இனையே பயன்படுத்தலாம். அதிலே Task Manager இனை Open செய்து Process Tap இல் test.exe என கோப்பிருந்தால் அதனை End Process இனை Click செய்வதன் மூலம் நிறுத்தி Remove Test/ Zimmer என்ற பட்டனை அழுத்தி நீக்கிக் கொள்ளலாம்.

தொடர்ந்து இது மாதிரி உங்கள் கணினியில் வைரஸ் வரக்கூடாது எனக் கருதினால் உங்கள் McAfee Virus Scan Console இல் User Defined Detection இல் மேற்சொன்னவாறு செய்து test.exe என்பதை சேர்த்து விடுங்கள்.

மேற்சொன்ன வைரஸ் பாதிக்கப்பட்ட Pen Driver இனுள் test.exe, மற்றும் Autorun.inf கோப்புகள் மறைந்து காணப்படும். இதனை நீங்களாகவே நீக்கிக் கொள்ளலாம். அல்லது மேற்சொன்ன Speed Virus Killer 2 இன் உதவியினாலும் நீக்கிக் கொள்ளலாம்.


உங்கள் Pen Driver களில் வைரஸ் தாக்கம் காரணமாக பல Folder கள் மறைந்து காணப்படும். இவற்றைப் பார்க்க விரும்பினால் Speed Virus Killer என்ற **SPEED IT NET** நிறுவனத்தின் முந்தைய Tool இன் உதவி கொண்டு Show என்பதை Click செய்வதன் மூலம் தெரியச் செய்யலாம்.

## Winsoft Technology/ myrvc வைரஸ்

தற்போது இறுதியாக இன்னொரு வகை வைரஸ் நம்மவரிடையே உலாவுகிறது. அது பாதித்தால் Pen Driver இனுள் உள்ள ஒரு Folder இனை மறைத்து விட்டு அதே பெயரில் exe கோப்பினை Folder Icon உடன் போட்டுவிடும். நீங்கள் தெரியாமல் அத்னைத் திறக்க யோசித்தால் அந்த வைரஸ் உங்கள் கணினியில் இறங்கி விடும். இதனை தற்போது வருகிற McAfee Update கண்டு பிடித்து விடும். இருந்த போதிலும் இதனை நீக்கவும் இன்னொரு வழி உண்டு. இதனால் பாதிக்கப்பட்ட கணினியின் C:/windows/system32 Folder இனுள் myrvc ஒரு கோப்பு Folder வடிவத்தில் காணப்படும்.

இதற்கு கணினியை மீளியக்கம் செய்யும் போது F6 அல்லது F8 விசையினை அழுத்துவதன் மூலமாக செல்லக்கூடிய Safe Mode இனூடாகச் சென்று அழித்து விட்டால் சரி. சாதாரண நிலையில் அழிக்கமுடியாது. Safe Mode இல் மாத்திரமே அழிக்கமுடியும்.

எது எப்படியாயிருந்த போதிலும் உங்கள் கணினியில் McAfee போன்ற அன்ரி வைரஸ் மென்பொருளை நிறுவி அதனுடைய update களை தொடர்ந்து நிறுவினால் ஓரளவுக்குப் பாதுகாப்பாக இருக்கலாம். McAfee Enterprise 8.5 இற்கான update களை SPEED IT NET நிறுவனம் இலவசமாக உங்கள் Pen Driver களில் ஏற்றித்தருகிறார்கள் அத்துடன் அவ்வப்போது புதிய வைரஸ் பற்றிய விபரங்களினை இவர்களின் இணையத்தளம் ஊடாக அவதானிக்கலாம்.




இருந்த போதிலும் Pen Driver இனை உபயோகிக்கும் போது நீங்கள் அவதானமாக இருக்கவேண்டும். அதனை Double Click செய்து ஒருபோதும் Open செய்யக்கூடாது. Mycomputer இனுள் சென்று குறித்த Driver இன் மீது Right Click செய்து Explore என்பதை Click செய்து Open செய்து வந்தால் வைரஸ் தாக்கத்தினைத் தவிர்க்கலாம். மேலும் உங்கள் Pen Driver இனுள் இருக்கும் Folder கள் கோப்புகளைத் திறக்க முன்னர் ஒன்றுக்கு இரண்டு தடவை யோசித்து உங்களுடையது என உறுதிப்படுத்திய பின் திறக்கவும்.

உங்கள் கணினியில் McAfee ஊடாக Scan செய்ய மனையும் போது Dat file missing என செய்தி வந்தால் நீங்கள் செய்யவேண்டியது என்ன?McAfee மென்பொறுளை Control panel ஊடாக நீக்கிவிட்டு மீள அதை நிறுவவேண்டும் (Install) பின்பு எமது நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற SpeedMacafee85i_for_new.exe என்ற கேப்பினை நிறுவவேண்டும் பின்பு வழமையான எமது SpeedMcAfee85i.exe கோப்பினை Access Protection இனை Virus Scan Console இல் நிறுத்தி(Stop பட்டனை கிளிக் செய்து) நிறுவ செய்ய வேண்டும். புதிதாக மென்பொருளினை அழித்து போடும்போதெல்லாம் SpeedMacafee85i_for_new.exe என்ற கோப்பினை நிறுவவேண்டும் அதன் பின்னர்தான் வழமையான எமது SpeedMcAfee85i.exe கோப்பினை நிறுவவேண்டும். பின்பு இணைய இணைப்பு இருந்தால் Update Now என்பதனூடாக நீங்களாகவே Update செய்யலாம்

# கொம்யூட்டர்ஜீ யின் பதில்கள்

## You tube, Google காணொளிகளைத் பதிவிறக்க வழி?

தரவிறக்கம் செய்வதற்கு உதவும் வகையில் பல இணையத்தளங்கள் உள்ளன. http://www.savevid.com/ இந்தத் தளத்தில் நீங்கள் பதிவிறக்கவேண்டிய காணொளியின் முகவரியை கொடுத்தால் போதுமானது. காணொளிகளை .flv (Flash Video) கோப்பாகவோ அல்லது .mp4 கோப்பாகவோ சேமிக்கலாம். http://downloadyoutubevideo.org/ , http://keepvid.com/ இப்படிப் பல தளங்களை சொல்லிக் கொண்டே போகலாம்.

இதனை விட நீங்கள் உங்கள் கணினியில் Realplayer ஐ நிறுவி இருந்தால் பதிவிறக்கலை மேலும் இலகுவாகச் செய்யலாம். நீங்கள் செய்யவேண்டியது தரவிறக்கவேண்டிய காணொளியின் மீது வலது பக்கமாகச் சொடுக்குவதன் மூலம் வரக்கூடிய பட்டியலில் "Download This Video To RealPlayer" என்பதை அழுத்துவது மாத்திரமே. (RealPlayer ஐ நிறுவியிருத்தல் அவசியம்.) நீங்கள் .flv கோப்பாகத் தரவிறக்கினால் அதனைப் பார்வையிட Flash Video Player ஐ பதிவிறக்கவேண்டும்.

## அழித்த பைல்களைத் திரும்பப் பெற முடியுமா?

நம் வாசகர்களிடமிருந்து அழித்த பைல்களை மீண்டும் எப்படி திரும்ப பெறுவது என்ற கேள்வி பல தடவைகள் எழுந்திருக்கிறது சென்ற வாரம் இந்த எண்ணத்துடன் இணையத்தில் உலா வந்த போது என்ற ஒரு புரோகிராம் இதற்காகவே எழுதப்பட்டு இணையத்தில் இலவசமாகக் கிடைப்பதாக ஒரு குறிப்பினைப் படித்தேன். தொடர்ந்து அதனைத் தேடி http://www.recuva.com/ என்ற முகவரியில் உள்ள தளத்திற்குச் சென்றால் மிகச் சிறப்பான முறையில் இந்த புரோகிராம் வடிவமைக்கப்பட்டு இருப்பதனை அறிய முடிந்தது.

இந்த புரோகிராம் பயன்படுத்த எளிதானது. விரைவில் டவுண்லோட் ஆகிறது. இன்ஸ்ரோல் செய்தவுடன் இயக்கி உங்களுக்கு அழிந்த பைல் குறித்து என்ன மாதிரி உதவி தேவை என இந்த புரோகிராமே கேட்டு வழி நடத்துகிறது. எடுத்துக் காட்டாக "ரீசைக்கிள்பின்" இலிருந்தும் அழித்த பைல்கள் எனக்கு மீண்டும் திரும்பக் கிடைத்தன. இழந்த பைல்களை மீட்பதில் இந்த புரோகிராம் அனைத்து வகை உதவிகளையும் தருகிறது என்பதில் சந்தேகமில்லை.

இதைவிடவும் வேறு மென்பொருள்கள் உள்ளன. RecoverMyFiles (www.recovermyfiles.com) இன்னுமொரு மென்பொருள் ஆகும். உங்கள் கணினி கார்ட் டிஸ்க் Format செய்யப்பட்டாலும் கூட மீள கோப்புக்களை மீளப்பெற இந்த மென்பொருட்கள் உதவுகின்றன

## System Restore என்றால் என்ன?

எமது கணினியை முன்னைய திகதி ஒன்றில் இருந்தவாறான நிலைக்கு கொண்டு செல்வதே இதுவாகும் இதற்கு செல்ல Start--> All Programs--> Accesories--> System Tools-->Sytem Restore என்ற வழியில் கிளிக் செய்க

நூலக சேவை நூலகம் யாழ்ப்பாணம்

## கேள்வி புளூ ஸ்கிறீன் வருகிறதே?

எனது கணினி 2.8 MHZ (Intel Celeron) 256 Ram, Intel mother Board, 128VGA (on board) கொண்டது. நான் சுமார் 3 மாதங்களுக்கு முன் Service Pack 3 CD ஐ Install செய்து கொண்டிருக்கும்போது ,Copying files, formatting எல்லாம் முடிந்த பிறகு Intall ஆகும் பொழுது,Monitor ல் Blue Background ல் White எழுத்துக்களில் எச்சரிக்கை வந்தது அதன் சுருக்கம் "உங்களது Computer Hardware ல் / Software ல் ஏதோ பிரச்சினை உள்ளது. உங்கள் கணினியை நிறுவியவரிடம் சொல்லவும்" என்பதாக இருந்தது. அதன் பின் Restart செய்து விட்டு பழையபடி XP SP2 ஐ போட்டேன். பின் 3 கிழமைகளுக்கு முன் மீண்டும் SP3 ஐ போட்டுக் கொண்டிருக்கும்போது (வேறு CD) மீண்டும் அதேபோல் வந்தது. இதற்கான காரணம் என்ன என தயவு செய்து குறிப்பிடவும்.

**பதில்**

மேற்குறிப்பிட்ட பிரச்சனை வருவதற்கு காரணம் உண்மையில் Hardware சாதனங்களில் உள்ள பழுது அல்லது ஒத்திசைவற்ற தன்மையே காரணம் எனினும் எந்த சாதனம் என்பதனை கண்டுபிடிப்பது மிகக்கடினமான பணி. நிச்சயம் இதனை பரிசோதிக்க கணினி பழுது பாாக்கும் நிலையமே பொருத்தமானது. ஏனெனில் இப்படியான இடங்களில் பாகங்களை மாற்றிப்பார்பதற்கான வசதிகள் காணப்படும். நீங்களே பரிசோதிக்கமுற்படுவீர்களானால் அனைத்து பாகங்களையும் மாற்றிப்பார்ப்பதற்காக கூடுதலாக செலவுசெய்ய வேண்டியிருக்கும் என்பதோடு இது அவசியமற்ற மாற்றீடாகவும் இருக்கும். எது எப்படியிருந்தபோதிலும் எமது அனுபவத்தில் முதலாவதாக சந்தேகிக்க கூடியது RAM ஆகும். அடுத்ததாக Hard Disk இனை சந்தேகிக்கலாம்.

## கேள்வி 16 kbps இல் Connect பண்ணுகிறதே?

நான் Motorolla Modem ஒன்று (56kbps Speed) வாங்கி அதனை நிறுவினேன். சிறீலங்கா ரெலிகொம் இணைப்பு பயன்படுத்துகிறேன் ஒவ்வொரு நேரமும் Connect ஆகும் பொழுதும் Task Bar ல் 19, 16, 28., 18 போன்ற Speed ஐயே காட்டுகிறது. இது ஏன்? சில வேளைகளில் Connect ஆகாமல் "cannot establish a connection" என வருகிறது. சில வேளைகளில் வேறு ஏதாவது வருகிறது. மேலும் நான் Internet சென்று சில நேரங்களில் Disconnect ஆகிறது. இது ஏன் எனவும் குறிப்பிடவும்.. Tamil Website ஏதாவது கூறவும்.

**பதில்**

மொடத்தினது தரவு பரிமாற்ற வேகத்துக்கும் இணைய இணைப்பு வேகத்துக்கும் சம்பந்தமில்லை. அதாவது உங்களுடைய மொடம் 56kbps' என்ற அதிகூடிய எல்லைவரை இணையத்தொடுப்பை ஏற்படுத்தவல்லது எனினும் உங்களுக்கு இணையசேவை வழங்கும் நிறுவனத்தின் இணையதொடுப்பு வேகம் கூறைவாக உள்ளது. இது சேவை வழங்குனர்களைப்பொறுத்து மாறுபடும் மேற்படி வேகம் குறைவாக வரும்போது துண்டித்து விட்டு 1250 இற்கு பதிலாக 0112474747 இல்லது 0112383838 இற்கு டயல் செய்யுங்கள். இணையஇணைப்பு ஏற்படுத்துவதில் இடையிடையே தடங்கல்கள் ஏற்படுவது வழமையே.தொடர்ச்சியாக தடைப்படுமாயின் மொடத்தில் பிழை இருக்கலாம்.

மேலும் Tamil Website ஏதாவது கூறவும் எனக்கேட்டிருக்கிருக்கிறீர்கள்.ஒன்றா இரண்டா தளங்கள் ஆயிரம் என சொல்லத்தோன்றுகின்றது. தமிழ் தளங்களை தொகுத்துவைத்திருக்கும் Webtamilan.com போன்ற தளங்களை நாடுவதன் மூலமாகவோ GoogleTamil.com போன்ற தேடு தளங்களில் தேடுவதன்மூலமாகவோ எண்ணற்ற தமிழ் தளங்களை தரிசிக்கலாம்.

# FaceBook.com
# மறக்கமுடியாத ஒரு மந்திரம்


-லோசன், சுபாங்கன்

உலகம் முழுவதும் வாழும் பெரும்பாலான இளசுகளின் வாழ்வில் மறக்கமுடியாத ஒரு மந்திரம் இது. ஒவ்வொருநாளும் ஒரு மணிநேரமாவது Facebook இல் செலவழிக்காவிட்டால் ஒருவனது/ஒருத்தியினது இளமையினையே தொலைத்துவிட்ட அளவுக்கு Facebook செலுத்துகின்ற ஆதிக்கம் மிக அதிகம்.

இளையோர் மட்டுமன்றி ஏனைய பராயத்தினரும் இதன்பால் ஈர்க்கப்பட்டுள்ளார்கள் என்பது Facebook இன் அண்மைக்காலப் பிரபல்யத்தினால் மேலும் புலப்படுகிறது. ஃபேஸ்புக் (Facebook) 2004இல் தொடங்கிய இணையவழி சமூக வலையமைப்பு நிறுவனமாகும். ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவர் மார்க் சக்கர்பர்க் ஹார்வர்ட் மாணவர்களுக்கு ஆரம்பித்து பின்பு வேறு ஐவி லீக் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அனுமதி கிடைத்தது. இன்றைய ஃபேஸ்புக்கில் 13 வயதான நபர்கள் சேரலாம். அலெக்சா நிறுவனத்தின் மதிப்பீட்டின் படி இணைய முழுவதிலும் ஃபேஸ்புக் தான் ஐந்தாம் மிகப் பிரபலமான இணையத்தளமாகும்.

Facebook ஆனது Social Network என்ற வகையறாவினுள் அடங்குகின்றது. அந்த வகையறாவினுள் அடங்கும் ஏனைய வலைத்தளங்களை விட அதிக பாவனையாளர் கணக்குகளைக் கொண்டு முதலிடத்தை வகிக்கின்றது. இது 150 மில்லியன் பாவனையாளர் கணக்குகளைக் கொண்டுள்ளது. இரண்டாம் இடத்தில் MySpace 130 மில்லியன் கணக்குகளோடு உள்ளது. Facebook இன் இந்த வெற்றிக்கு அதனுடைய User Friendly தன்மை காரணமாக இருக்கலாம். அத்துடன் அது பாவனையாளர்களின் பாதுகாப்புக்காக இறுக்கமான நடைமுறைகளைக் கையாண்டு வருகின்றது. அண்மையில் கூட அதன் Spam Users இருவருக்கு நீதிமன்றில் தண்டனை வாங்கிக் கொடுத்தது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இணையத்தைப் பயன்படுத்தும் எந்த இருவர் சந்தித்துக் கொண்டாலும் அவர்களது பேச்சில் Facebook கண்டிப்பாக இருக்கும் என அடித்துக் கூறக்கூடிய அளவிற்கு Facebook இன் பரம்பல் உள்ளது. அமரிக்க அதிபர்






தேர்தலின்போது தற்போதய அதிபர் ஒபாமாவின் பிரசார உத்தியில் Facebook உம் ஒரு முக்கிய இடம் வகித்தது. எல்லா மட்டத்தினரது தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதமாக அது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதில் இணைந்து கொண்டால் உங்களைப்பற்றிய விபரங்களையும் படங்களையும் கருத்துக்களையும் மற்ற நண்பர்களுடன் , நண்பர்களின் நண்பர்களுடன் பரிமாறிக்கொள்ள முடியும். வாழ்த்துக்களை தெரிவிக்கமுடியும் இது நண்பர்களின் வலைப்பின்னல் என்று அழைக்கப்படலாம். இங்குள்ள தகவல்கள் குறித்த தரப்பினருக்கே அன்றி அனுமதியின்றி அனைவரினாலும் பார்க்கப்படமுடியாது Privacy என்ற விடயத்தில் இது நண்பர்களுக்குள் திறந்தது. எனவே தனித்துவமான விடயங்களையும் இரகசியங்களையும் இங்கே பரிமாறிக்கொள்வது கூடாது அதற்கு மின்னஞ்சலை விட்டால் வேறு ஒன்றுமில்லை. தனித்துவமான செய்திகளை குறித்த நபருக்கு அனுப்ப விரும்பின் Send message என்ற பகுதியை Face Book இல் பயன்படுத்தலாம்.Facebook இனுள் Login ஆனதுமே அதிலுள்ள விடயங்கள் எம்மை ஒரு Virtual World எனப்படும் ஒரு மாய உலகத்தினுள் இழுத்துச் சென்று விடுகின்றது.எமது எல்லாச் சிந்தனைகளையும் சிதறடித்து நேரம் போவது கூடத் தெரியாது அதனுடன் மூழ்கிக் கிடக்க வைத்துவிடும்.

எனவேதான் பல அலுவலகங்களில் இன்று அலுவலக நேரத்தில் Facebook பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டிருப்பதுடன் அதை மீறுவோர்மீது கடுமையான நடவடிக்கைகளும் எடுத்துவருகின்றனர். இவ்வாறு நேரத்தையும் வீணடிக்கும் Facebook இல் நல்ல விடயங்களும் செய்யமுடியும்.முதலில் Facebook இல் நண்பர்களைத் தேர்வுசெய்வதில் அவதானமாக இருக்கவேண்டும். நண்பர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கவேண்டும் என்பதற்காக கண்ணில் தட்டுப்படுவோரையெல்லாம் நண்பர்களாக்குவோர் பலர். அதை விடுத்து எம்மைப்போன்ற விடயங்களில் ஆர்வம் உள்ளோரையும், எமது துறையில் இருப்போரையும் நண்பர்களாக்கிக்கொண்டால் அவர்களிடமிருந்து எமக்குத் தெரியாத பல விடயங்களை அறியலாம். கருத்துக்கள், ஆலோசனைகள் கேட்கலாம்.


Facebook இல் நிறையக் குழுக்கள் உள்ளன. அவற்றில் எமக்கு ஆர்வமுள்ள குழுக்களில் இணைந்துகொள்ளலாம். இவ்வாறான குழுக்களின் பக்கத்தில் Discussion Board எனும் பகுதி காணப்படும். இதில் உள்ள விடயங்களில் நாமும் சேர்ந்து அலசலாம். இல்லை, எமக்குத் தேவையான விடயங்களில் நாமே தலைப்பை உருவாக்கலாம். இதன்மூலம் தெளிவு பெறலாம்.

Facebook போலவே நட்புறவுகளை இணைக்கின்ற சமூகக் குழுக்கள்,ஏனைய பொழுதுபோக்கு அம்சங்களை உள்ளடக்கிய இதேபோன்ற தளங்கள் தான்

தொடர்ச்சி 13ம் பக்கம்

# குழந்தைகளுக்கான இணையம்

-கவி ரூபன்



உங்கள் வீட்டில ஒரு கணினி அதோடு இணைய இணைப்பு வேற... நீங்க பல மாதிரியான இணையபக்கங்களுக்கு சென்று வாறீங்க.... எல்லாம் முடிந்த பிறகு நீங்க உங்க வேலையை பார்க்க... உங்க பிள்ளையும் அதே கணினியை பயன்படுத்துது... ஏடாகூடமா எல்லாம் சில வேளைகளில் பக்கங்கள் முகத்தில் அறையும்... சில நேரம் தெரிந்து நடக்குது... பல சமயங்களில் தெரியாமல்...

இதற்காக பல பெற்றோர் தங்கள் இணைய உலாவியில் (பிறவுசர்) பல கட்டுப்பாடுகளை கூட நிறுவியிருக்கிறார்கள். சரி விசயம் என்ன? இந்த அவஸ்தைகளை மறந்து என் குழந்தை அதற்கு தேவையான பக்கங்களுக்கு மட்டுமே சென்று வருது என்ற நிம்மதிப் பெருமூச்சோடு உங்க வேலையை நீங்க கவனிக்க விரும்பினால்...? இதற்கு வழி குழந்தைகளுக்கான இணைய உலாவியை உங்க கணினியில் நிறுவுவது... KiDZUi – The internet for Kids என்ற சுலோகத்தோட காணக்கிடைக்கின்ற இந்த இணைய உலாவி குழந்தைகளுக்கு பல விதங்களில் நன்மை செய்யும்.

**உங்கள் கணினியில் Kidzui ஐ நிறுவுதல்.**

நீங்கள் தனியாக இயங்கும் மென்பொருள் போன்று நிறுவலாம். அல்லது நெருப்பு நரி(Firefox) இணைய உலாவி பயன்படுத்துபவர்கள் இதனை ஒரு Add-on போன்றும் நிறுவலாம். நிறுவிய பின் பெற்றோர் அல்லது பொறுப்பாளர் தங்கள் பெயரில் ஒரு பயனர் கணக்கை தொடங்கவேண்டியது அவசியம். இது ஒரு குழந்தைகளுக்கான வடிக்கட்டப்பட்ட இணைய உலாவி போல செயற்படுகிறது. அவர்களின் வயது என்ன என்று ஆரம்பத்தில் பதிவு செய்து விட்டால் அந்த வயதினருக்கு தேவையான காணொளிகள், விளையாட்டுக்கள் போன்றவை காணக்கிடைக்குது. Kidzui ஐ நிறுவ விரும்புபவர்கள் : இங்கே போகவும் http://www.kidzui.com/

கொசுறுத் தளம் : http://www.starfall.com/ ஐ குழந்தைகளுக்கு மட்டும் – என்ர புருசன் குழந்தை மாதிரி என்று நினைப்பவர்களும் பயன்படுத்தலாம்?

## கூகுளை விட 3 மடங்கு திறன் அதிகம்


### உலகிலேயே அதிவேக தேடுதல் இணையதளம் 'கூல்' அறிமுகம்

உலகின் மிகப் பெரிய, அதிவேகமான தேடுதல் இணையதளம் 'கூல்' (cuil.com) அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது. இப்போதைக்கு கூகுள் (google.com) இணைய தளம்தான் நம்பர் 1 ஆக உள்ளது. அதைவிட 3 மடங்கு அதிக திறன் வாய்ந்தது கூல் என அந்த இணையதள உரிமையாளர்கள் கூறியுள்ளனர்.

கூல் இணையதளத்தில் என்ன விசயம் தேவை என ரைப் செய்தால், 12,161 கோடி இணைய பக்கங்களை தேடி தகவல் தருமாம். இது கூகுளை விட 3 மடங்கு அதிகம். கூல் இணையதளத்தை ஸ்டான்போர்டு பல்கலைக்கழக பேராசிரியர் டாம் காஸ்டெல்லோ, அவரது மனைவியும் முன்பு கூகுள் நிறுவனத்தில் பணிபுரிந்தவருமான அன்னா பாட்டர்சன் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து உள்ளனர். "எல்லாவிதங்களிலும் கூகுள் இணையதளத்தை விட இது மேலானது. அதிவேகமானது, அதிக இணைய பக்கங்களை தேடும்" என்கிறது இந்த ஜோடி. ஒரு வார்த்தையை வாடிக்கையாளர் ரைப் செய்தால், அந்த வி'யத்தை பற்றி மட்டுமல்லாமல், அது தொடர்பான பிற வி'யங்களையும் இந்த இணையதளம் கொட்டிவிடுமாம்.

**தெரிந்திருக்க வேண்டிய இலங்கை அரசாங்கத்தின் முக்கிய இணையத்தளங்கள்:**

www.gov.lk
www.icta.lk
www.gidc.gov.lk
www.nic.lk
www.schoolnet.lk
www.doenets.lk
www.documents.lk
www.news.lk
www.nationalsecurity.lk




## நூலகம்.நெற் - ஈழத்து ஆவணங்களின் சங்கமம்

ஈழத்து எழுத்தாவணங்களுக்கான மின்னூலாக்கத் திட்டம் ஒன்று இணையத்தில் noolaham.net என்ற முகவரியில் செயற்படத்தப்பட்டு வருகிறது.ஈழத்து எழுத்தாவணங்களை அடுத்த தலைமுறைகளுக்கும் கிடைக்கக் கூடியதாக ஆவணப்படுத்தி, அவற்றை வாசிப்பதற்கும் உசாத்துணைப் பாவனைக்கும் இலகுவில் பெறக்கூடியதாக இணையத்தில் வெளியிடல் தான் இதனுடைய குறிக்கோள் ஆகும். இங்கே ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள், சஞ்சிகைகளும் ஈழம் தொடர்பான நூல்களும் மட்டுமே வெளியிடப்படலாம். பதிப்புரிமையுள்ள நூல்களை வெளியிட பதிப்புரிமையுள்ளோரின் அனுமதி பெறப்பட வேண்டும்.நூலகத் திட்டத்தில் இதுவரை 2,800 க்கும் மேற்பட்ட எழுத்தாவணங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.இது எந்தத் தனிநபர்களுக்கோ நிறுவனங்களுக்கோ சொந்தமானதல்ல.தன்னார்வலர்களின் கூட்டுழைப்பாலேயே இது முன்னெடுக்கப்படுகிறது. புல அரிய நூல்கள் சஞ்சிகைககள் இந்தததளத்தில் காணப்படுகின்றன சென்று பதிவிறக்கி பயன்பெறுங்கள்

## Free Notes ,Ebooks????

# ஓபின் கோர்ஸ் வெயார்(Open Course Ware)

ஓபின் சோர்ஸ் வெயார் சொப்ட் வெயார் கார்ட் வெயார் பற்றியெல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள் ஆனால் இதைப்பற்றி கேள்ளிவப்பட்டிருக்க மாட்டீர்கள்



**பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் தமது மாணவர்களுக்காக தயாரிக்கும் உசாத்துணைக்குறிப்புக்கள் மற்றும் விரிவுரைக் குறிப்புக்களை இலவசமாக சகலரும் படித்து பயன்பெறும் வகையில் பகிர்ந்து கொள்ளும் செயற்பாடே ஓபின் கோர்ஸ் வெயார்(Open Course Ware)ஆகும்.**

இதனை கையாள்வதற்கான அமைப்பாக Open Course Ware Consortium (www.ocwconsortium.org)என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டிரக்கிறது பல நாற்றுக்கணக்கிலான கல்வி நிறுவனங்கள் இந்த பணியில் ஒன்றிணைந்திருக்கின்றன. இந்த வகையில் உங்கள் கற்கைநெறிகள் சம்பந்தமாக உசாத்துணைக்குறிப்புக்களை இலவசமாக பெற்றுக்கொள்ளக்கூடிய முக்கிய தளங்கள் சிலவற்றினை இங்கே பட்டியலிடுகின்றோம் சென்று பயன்பெறுங்கள் பெரும் புதயலே உங்களுக்காக காத்திருக்கிறது.இவற்றை இலவச இணைய நூலகங்கள் என சொன்னாலும் மிகையில்லை முகவரி இதோ
http://www.ocwconsortium.org/members/consortium-members.html

மேலும் சில முகவரிகள்:
http://ocw.mit.edu/
http://rocw.raifoundation.org/
http://www.vembady.com/? area=ocw

Google Lat Long Blog
News and notes by the Google Earth and Maps team

# Google உம் Street View சங்கடங்களும்...

***நீங்க செய்யிற கூத்தெல்லாம் செய்மதிகளால படம் பிடிக்கப்படுவதும் எதிர்காலத்தில அனைத்தும் இணையம் மூலம் பார்க்கப்பட கூடியதாக இருக்கப்போவதும் உண்மை.***

Google இன் Street View பற்றி சிலர் அறிந்திருக்கலாம். அறியாதவர்களுக்காக ஒரு சிறு விளக்கத்தை சொல்லிவிட்டு விசயத்திற்கு வருவோம்... Street View என்றால் என்ன? Google Maps மற்றும் Google Earth இன் உள்ளமைந்த பகுதியாக விளங்கும் இது, உலக நாடுகளின் வீதிகளை, 360 பாகையில் படம்பிடிக்கக்கூடிய கமெராக்களைக் கொண்டு எடுக்கப்பட்ட படங்களைக் கொண்ட ஒரு தொகுப்பு . என்ன விசேசம் என்றால் நீங்கள் ஒரு வீதியில் நடந்து செல்கின்ற உணர்வு உங்களுக்குத் தோன்றும். அண்மையில் இலண்டன் நகரின் வீதிகளின் காட்சியை அதிகாரபூர்வமாக Google நிறுவனம் வெளியிட்டது. அங்க தான் வந்தது வம்பு...

என்ன விசயம்? Street View இற்காக படம் எடுக்கப்பட்ட சமயத்தில் சாலைகளில் யார் நடந்துசென்றார்கள், எந்த கார் எந்தப்பக்கமாகப் போனது போன்ற பல நீங்கள் பார்க்கும் போது உங்கள் கண்ணுக்கு தென்படலாம். (வில்லங்கமான சிலவும்) சாலைகளில் செல்பவர்களின் முகங்கள் மற்றும் கார் இலக்கத்தகடு ஆகியன தெரியாதவாறு மறைக்கப்பட்டுள்ளது என்று Google சொன்னாலும் அது முழுக்க உண்மையில்லை. Street View ஐ பார்த்துக் கொண்டிருந்த இலண்டனைச் சேர்ந்த பெண் ஒருவர் தனது கணவனின் Range Rover கார் பெண் நண்பியின் வீட்டுக்கு வெளியே நிற்பாட்டப்பட்டுள்ளதை அவதானித்துள்ளார். அதனால் என்ன என்று தானே கேட்கிறீங்க? அதாவது அந்தப் படம் எடுக்கப்பட்ட திகதியில் அந்தப் பெண்ணின் கணவன் வியாபார விடயமாக வெளியே செல்வதாக சொல்லிச் சென்றது தான் பிரச்சனைக்கு காரணம். இதனால் அந்தப் பெண் சட்ட நடவடிக்கையில் இறங்கியுள்ளார். (பாவம் Google என்ன செய்யும்? )

2007 ம் ஆண்டு அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சேவை அண்மையில் இலண்டனில் மேலும் தொடர்ந்து நெதர்லாந்திலும் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின் பலர் இதன் இரகசியத்தன்மை குறித்து கேள்வி எழுப்பியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. பலரும் தர்மசங்கடமான நிலையில் படம்பிடிக்கப்பட்டுள்ளனர். இன்னும் எத்தனை புதிய பிரச்சனைகள் வருமோ தெரியல... ?

Google இற்கு ஒரு சின்ன வேண்டுகோள். இந்தச் சேவையை இலங்கைக்கும் விஸ்தரிச்சால் நன்றாக இருக்கும்... பல வில்லங்கங்கள் தெரியவரலாம் அக்கம் பக்கம் பாத்திட்டு ஒழுங்கைகளில் அசுத்தம் செய்யிற ஆட்கள் எல்லாம் பிடிபடுவினம்.. இதைக்கேட்ட எனது நண்பன் சொன்னான் " டேய் இனிமேல் அக்கம்பக்கம் காற்று வளம் பார்க்கிறதோட மேல வெளியா இருக்கா என்றும் பார்க்க வேண்டும்" என்று.

நாம் அன்றாட வாழ்கையில் சொல்வதுண்டு நீங்க செய்யிறதெல்லாம் கடவுளுக்கு வெளிச்சம் என்று! ஆனா அந்த கடவுள் யார் என்று ஒருவரும் பார்த்ததில்லை செய்மதிகள் தான் கடவுள்போலும்! நீங்க செய்யிற கூத்ததெல்லாம் செய்மதிகளால படம்பிடிக்கப்படுவதும் எதிர்காலத்தில அனைத்தும் இணையம் மூலம் பார்க்கப்பட கூடியதாக இருக்கப்போவதும் உண்மை. இனிமேல் யாருமில்லதாத தீவுக்கு போகவேணும் கண்காணாத இடத்துக்கு போறன் என்று ஒருத்தனும் சொல்ல முடியாது பாருங்கோ! நல்லவன்... எனக்கு நானே நல்லவன்... என்று இருந்தால் ஒரு பிரச்சனை இல்லை.... http://maps.google.com

# அடிப்படை தகவல் தொழில்நுட்பம்-08

- தவரூபன் -

ICT, GIT மாணவர்களுக்குரியது

## மதர்போர்ட் மர்மங்கள்?


கடந்த இதழ்களில் இப்பகுதியில் கணினியில் பாகங்கள் பொருத்துமிடங்கள் பற்றி பல விடயங்களைச் சொல்லியிருந்தேன். இம்முறை மதர்போட் பற்றி சற்று விளக்கமாக பார்ப்போம்.

எந்த ஒரு இலத்திரனியல் சாதனத்திலும் Circuit Board எனப்படுகின்ற Mother Board என்ற பாகம் இல்லாமல் இருக்காது. இதிலே பாகங்கள் பொருத்துமிடங்கள் மற்றும் அவற்றுக்கான மின்சுற்று தரவுச்சுற்று போன்றவை காணப்படும். அந்த வகையில் கணினியும் ஒரு இலத்திரனியல் சாதனமல்லவா? இதிலே உள்ள Circuit Board இனை நாம் மதர்போட் என்றே அழைக்கின்றோம். ஆரம்ப காலத்தில் போன்றல்லாது தற்போது வரும் கணினிகளில் மொத்த சாதனங்களையும் இணைப்பதற்கேற்ற வகையில் மதர்போர்ட்கள் வெளிவருகின்றன. இதனையே Onboard (அதாவது Device on the Board) தொழில்நுட்பம் என்றழைக்கின்றோம். உங்கள் கணினியில் Sound Card, Onboard ஆனதா அல்லது Off Board ஆனதா? என ஒருவர் கேட்டிருக்கலாம். காரணம் ஏன்? Sound Card இனது சகல விடயங்களும் மதர்போட் இலேயே இருந்தால் அது On the Board தொழில்நுட்பம். எனவே Sound Onboard எனலாம். இல்லாமல் ஒரு Card மூலமாக இணைத்தால் அது Off Board தொழில்நுட்பம் அப்போது Sound Off Board என்போம்.

மதர்போட் இல்லாமல் ஒரு கணினியை கற்பனை செய்ய முடியாது. அந்தளவுக்கு அது முக்கியமானது. மதர்போட் இனது வடிவமைப்பு/வகை ஆனது அதிலே காணப்படும் பொருத்துமிடங்கள் செருகிகள் போன்றவற்றினைப் பொறுத்து வேறுபடும். மதர்போட் உற்பத்தி நிறுவனங்களின் பெயர்களை வைத்து மதர்போட் களை வகைப்படுத்துதில்லை. அது வெறுமனே உற்பத்தி நிறுவனங்களே. மதர்போட் உற்பத்தி நிறுவனங்களுக்கு உதாரணமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். Intel, Astrock, Asus, Foxconn, GIgaphyte, Biostar, ECS, HP, IBM.

மதர்போட் களை நோக்கும் போது மிகப் பிரதானமாக கவனிக்கப்பட வேண்டியது. அதிலுள்ள பிரதான Chip வகையினைத் தான். Chip களுக்கு உதாரணமாக Intel, VIA, SIS என்பவற்றைக் குறிப்பிடலாம். அதாவது Intel மதர்போட்கள் தான் Intel Chip களைக் கொண்டிருக்க வேண்டும் என்றில்லை. வேறு உற்பத்தியாளர்களின் மதர்போட்கள் Intel Chip இனைக் கொண்டிருக்க முடியும். அதற்காக அந்த மதர்போட்கள் Intel மதர்போட் என்று ஆகிவிடாது.


மதர்போட்களின் வகைகளில் அடுத்தாக பிரதான பிரச்சனை Processor எனப்படும் நுண்செயலிகள் பொருத்துமிடங்களாகும். இவை Socket எனப்படுகின்றன. ஆரம்ப காலத்திலுள்ள மதர்போட்களில் Processor கள் PGA (Pin grid Array) எனப்படும் பொருத்துமிடஙகளூடாகவே பொருத்தப்பட்டன. அந்த வேளையில் வெளிவந்த Processor கள் PGA Processor களாக இருந்தன. இவற்றின் பொருத்தமிடங்கள் Socket7 என அழைக்கப்பட்டன. பின் Socket478, Socket754, Socket939 என இவை வேறுபட்டன. அதற்கேற்றவகையில் Processor களும் வெளிவந்தன. இங்கே 478, 939, 754 என்பன Pin களைக் குறிக்கின்றன. நீங்கள் 478 Board என்ற சொல்லை அநேகம் கேள்விப்பட்டிருப்பீர்கள். இது அவ்வகையான Socket கொண்ட மதர்போட்களைக் குறித்து நிற்கின்றன. அவ்வகை Board களுக்கு 478 Socket Processor களே பொருத்த முடியும். அதாவது 478 Socket கொண்ட Processor பொருத்தப்பட்ட கணினியில் மதர்போட் பழுதாகிவிட்டால் 478 Socket கொண்ட மதர்போட் இனையே மாற்றமுடியும். இவை அருகி விட்டதால் தற்போது இவற்றின் விலை அதிகமாக காணப்படுகின்றன.





சரி அப்படியாயின் தற்போது எந்த வகையான மதர்போட்கள் உண்மையில் உள்ளன? தற்போது Intel நிறுவனம். LGA (Land Grid Array) வகை மதர்போட்கள் மற்றும் Processor களையே வெளியிடுகின்றது இவை 775 Socket கொண்டவை இவ்வகை Processor கள் Pinகளை கொண்டிராது. Pinகள் மதர்போட்களில் காணப்படும்.

தற்போது புரோசசர்கள் பொருத்தப்பட்ட மதர்போர்ட் களும் வெளிவர தொடங்கிவிட்டன. சிறிய ரக கணினிகளை உருவாக்கும் நோக்குடனும் குறைந்த விலையில் கணினிகளை சந்தைக்கு விடும் நோக்குடனும் இவ்வகை (Built in Processor Mother board) மதர்போர்ட் கள் மலிவாக கிடைக்கின்றன. பழைய கணினிகளினை வைத்திருப்போர் குறைந்த செலவில் தமது கணினிகளை புதிய ரக கணினியாக மாற்ற இது உதவும். இவ்வகை மதர்போர்ட்களில் இன்ரலின் Atom புரோசசர் மற்றும் VIA நிறுவனத்தின் VIA C7 புரோசர் களுடன் அந்நிறுவனங்களின் பிரத்தியேக வெளியீடுகளாக வெளிவரும் மதர்போர்ட்கள் நம்மிடையே பிரபல்யம் பெறத்தொடங்கியுள்ளன. விற்பனையாளர்கள் அவற்றைப்பொருத்தி குறைந்த விலையில் கணினியை தந்தால் ஏதோ அவர்கள் மற்றவர்களை விட குறைந்த விலையில் கணினியை தருகிறார்கள் என்று நினைத்து விடவேண்டாம்.

எனினும் இந்த வகை போர்ட்கள் கொண்ட கணினிகள் தரமற்றவை என்று நாம் கூறவில்லை. குறைந்த விலையில் கணினி வாங்கவேண்டும் அல்லது பழைய கணினியை புதிதாக மாற்ற விரும்புவோர் இந்த தெரிவை மேற்கொள்ளலாம். இங்கு Atom புரோசசர் கொண்ட மதர்போர்ட்டில் VGA பழுதானால் புதிய மதர்போர்ட் வாங்கவேண்டிய நிலை உண்டு ஆனால் VIA நிறுவனத்தின் VIA C7 புரோசர் மதர்போட் அப்படியல்ல. இது Off Board VGA இற்காக PCI Express Slot கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.






அடுத்து மதர்போட்களில் காணப்படும் முக்கிய பொருத்துமிடமாக RAM பொருத்துமிடத்தைக் குறிப்பிடலாம். இது ஆரம்ப காலத்திலிருந்து வளர்ச்சி பெற்று SD, DDR1, DDR2, DDR3 என பரிணமித்துள்ளன தற்போது DDR2 Socket கொண்டவை பிரபல்யமாகியுள்ளன. இந்த RAM பொருத்துமிடங்களில் அந்தந்த RAM கள் மாத்திரமே பொருத்த முடியும். DDR1, DDR2, DDR3, RAM கள் பற்றி மிக விரிவாக மைகொம்யூட்டர் 3 வது இதழில் பக்கம் 26 இல் கூறப்பட்டுள்ளது.

இதைவிட மதர்போட் களில் காணப்படும் IDE(PATA), SATA பொருத்துமிடங்கள் CD ROM மற்றும் Hard Disk கள் பொருத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. IDE களில் Pin கள் காணப்படும். அவை குறித்த சாதனத்துடன் IDE Bus கேபிள்களூடாக இணைக்கப்படுகின்றன. SATA இல் இது மெல்லிய இடைவெளியுடன் கூடிய L வடிவ பொருத்துமிடங்களைக் கொண்டது. SATA சாதனங்கள் சிவப்பு நிறத்தில் காணப்படும் SATA கேபிள்களூடாகப் பொருத்தப்படுகின்றன. தற்போது SATA பொருத்துமிடங்கள் கொண்டதாகவே DVD ROM களும் Hard Disk களும் வெளி வருகின்றன. SATA, PATA வேறுபாடுகள் பற்றி மைகொம்யூட்டர் சஞ்சிகையின் 2 வது இதழில் பக்கம் 18 இல் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

இதைவிட மதர்போட் இல் உள்ள VGA பொருத்துமிடம் பற்றி கவனிக்கலாம். VGA பற்றி ஏற்கனவே சொல்லிவிட்டேன். Onboard VGA இல்லாவிட்டால் Off Board இல் இணைப்பதற்கான பொருத்துமிடமாக ஆரம்பத்தில் PCI எனப்படும் (வெள்ளைநிறம்) பொருத்துமிடம் பயன்பட்டது. எனினும் பின் வந்த மதர்போட் களில் அது AGP (Accelerated Graphic Port) பொருத்துமிடம் ஆக External VGA Card களினைப் பொருத்துவதற்குப் பயன்பட்டது. அது Brown நிறத்தில் காணப்படும். தற்போது External VGA கள் PCI Express களாகவே வெளிவருகின்றன .இவற்றை பொருத்தக்கூடிய வகையில் தற்போது வரும் மதர்போர்ட்களில் PCI Express பொருத்துமிடங்கள் காணப்படுகின்றன. முன்னர் பார்த்த AGP VGA Card கள் இதில் பொருத்த முடியாது.

அடுத்து PCI Socket/ Slot - இவை மேலதிக Network/ Sound Video Capture card/ TV card / Modem போன்றவற்றினைப் பொருத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவை **P**eripheral **C**omponent **I**nter connect எனப்படுகின்றன.

இறுதியில் Mother Board இல் காணப்படும் Bios Chip கள் பற்றி பார்த்தால் இதனை ஒரு Fire ware எனலாம். இதனை கணினியில் உள்ள Mother Board சம்பந்தமானதும் அதிலே பொருத்தப்படுகின்ற சாதனங்கள் தொடர்பான கட்டுப்பாடுகள் மற்றும் தகவல்களினை தன்னகத்திலே கொண்டுள்ளன இந்த Chip கள் கொண்டுள்ள CMOS Setting களை கணினியினை மீளியக்கம் செய்யும் போது Del அல்லது F2 விசையினை அழுத்துவதன் மூலம் பெறப்படும் பகுதியினூடாக மாற்றலாம். அல்லது பழைய நிலைக்கு கொண்டு வரலாம். இவை பலவீனமடைந்தாலும் Mother Board செயலிழக்கலாம். அல்லது கணினியில் நேரம் மாற்றமடையாமல் இருக்கலாம் இதற்காக Mother Board ஒரு சிறிய மின்கலம் கொண்டிருக்கும். அதனை தேவைப்பட்டால் மாற்றிக் கொள்ளலாம்.இவை பொதுவாக Mother Board களில் காணப்படும் பாகங்கள் மற்றும் அவற்றுக்கான விளக்கங்கள் ஆகும். இவை பெரிதும் உங்களுக்கு உதவியாக அமையும் என்பதில் ஐயமில்லை




# Optical Drivers

CD, DVD, BD

## சில தகவல்கள்

~தவா~



நம்முடைய அன்றாட வாழ்வில் CD, DVD, Hard Disk, Pen Drive என சேமிப்பு ஊடகங்கள் பற்றி கதைக்கின்றோம். குறிப்பாக CD, DVD, BD போன்றவற்றையும் அதனை எழுதும்/ வாசிக்கும் சாதனங்கள் (Optical Drivers) பற்றியும் உங்களுக்கு சில மயக்கங்கள் இருக்கத்தான் செய்கிறது. அவற்றினை நீக்குவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

இந்த CD, DVD, BD கள் வெளியக சேமிப்பு ஊடகங்கள் என்ற பிரிவுக்குள் வருகின்றன. CD- Compact Disc, DVD – Digital Versatile/Video Disc, BD – Blue Ray Disc . CD பற்றி அனைவருக்கும் தெரியும். இது பொதுவாக 800MB அளவு வரையான கொள்ளளவைக் கொண்டது. இதனை CD ROM (Read Only Memory)களில் வாசிக்கமுடியும். CD-RW சாதனங்களில் வெற்று CD களை இட்டு எழுத(Write) முடியும்.

DVD கள் உயர்தர வீடியோக்கள் , ஓடியோக்கள் மற்றும் தரவுகளை சேமித்து வைப்பதற்குப் பயன்படுகின்றன. இவற்றின் கொள்ளளவு 4.37GB தொடக்கம் 17 GB வரை கிடைக்கின்றன. இவற்றினை சாதாரண CD ROM களில் இட்டு வாசிக்க முடியாது. DVD ROM/ DVD RW/ DVD Combo போன்ற சாதனங்களில் இட்டுத் தான் வாசிக்க முடியும். இதனை DVD Player களிலும் வாசிக்கலாம். DVD – R, Disc கள் மீளவும் Write செய்ய முடியாதவை. DVD RW மீள மீள அழித்து அழித்து Write செய்து பயன்படுத்தக் கூடியவை. DVD- R, DVD-RW, Disc களில் இரண்டு வகையுண்டு

ஒன்று Single Side [4.37GB](DVD-5) , மற்றையது Double Side [8.75 GB] (DVD-10) இதன் இரண்டு பக்கமும் Write செய்ய முடியும். DVD- R இனை / DVD- RW இனை Write செய்ய DVD Writer கள் பயன்படுத்தலாம். CD Writer களிலோ, அன்றி DVD Combo களிலோ DVD கள் Write செய்யப்பட முடியாது. DVD+R, DVD+RW Disc கள் என்றுமுள்ளன இவையும் ஒருவகை டிவிடி வகைகள்தான்

இவற்றில் உள்ள ஒரு முக்கிய வேறுபாடு Drag and Drop வசதி ஏதாவது குறித்த Disc இனுள் Write செய்ய கோப்புகளை இழுத்து விடக் கூடியதாக இருக்கும். (இப்போதல்ல இனி வரும் விண்டோஸ் இயங்குதளங்களில்) எதிர்காலத்திற்கேற்ப இப்பவே தயாரானது தான் இவை. மற்றையபடி DVD-R, DVD- RW இற்குள்ள அனைத்து தகமைகளும் DVD+R, DVD-+RW, Disc களில் உள்ளன. இவற்றினை பெரும்பாலான DVD Writer களில் பயன்படுத்த முடியும். DVD Multi Recorder என DVD யில் குறிப்பிடப்பட்டிருப்பின் இவற்றிற்கு இசைவாக்கம் கொண்டவை எனலாம். அத்துடன் இது பற்றி குறிப்பிட்ட- DVD Writer இன் பெட்டியில் குறிப்பிடப்பட்டு இருக்கும்.

**DVD RAM Disc**

இது பெரியளவிலான Hard Disc களில் இருந்து Data Backup செய்வதற்கு பயன்படுத்தப்படும். இதனை 4.7GB (single side) 9.4GB (Double Side) வகைகள் உண்டு இதில் 1,00,000 இற்கு மேற்பட்ட தடவைகள் மீள மீள write செய்யலாம். இவற்றின் விலை அதிகம் . இதனை வாசிப்பதற்கு DVD RAM இசைவாக்கம் கொண்ட DVD Writer பயன்படுத்தலாம். இவற்றினை சாதாரண DVD ROM களிலும் DVD Player களிலும் வாசிக்க முடியாது.

SS = Single Sided; DS = Dual Sided;
SL = Single Layer; DL = Dual Layer



Capacity and nomenclature

| Designation | | Sides | Layers (total) | Diameter (cm) | (GB) |
|---|---|---|---|---|---|
| DVD-1 | SS SL | 1 | 1 | 8 | 1.46 |
| DVD-2 | SS DL | 1 | 2 | 8 | 2.66 |
| DVD-3 | DS SL | 2 | 2 | 8 | 2.92 |
| DVD-4 | DS DL | 2 | 4 | 8 | 5.32 |
| DVD-5 | SS SL | 1 | 1 | 12 | 4.70 |
| DVD-9 | SS DL | 1 | 2 | 12 | 8.54 |
| DVD-10 | DS SL | 2 | 2 | 12 | 9.40 |
| DVD-14 | DS DL/SL | 2 | 3 | 12 | 13.24 |
| DVD-18 | DS DL | 2 | 4 | 12 | 17.08 |

**Dual Layer Discs**

DVD – R DL / DV – RW DL - இவையும் DVD Disc கள் தான். இதில் DL என்பது Dual Layer என்பதைக் குறிக்கிறது. இங்கு Single Side Dual Layer, Double Side Dual Layer என வகைகள் உண்டு Single Side ஆனது ஒரே பக்கத்தில் வாசிக்கவோ எழுதவோ முடியும். என்றாலும் இங்கு இரண்டு Layer களில் தரவு பதிவாகும். அது எமக்கு தெரியப் போவதில்லை. அதேபோல் Double Side Dual Layer எனும்போது இரண்டு பக்கமும் பதிவாகும் ஒருபக்கத்தில் இரண்டு Layer கள் இருக்கும் ஆக மொத்தம் 4 Layer கள் தரவு பதிவாகின்றன. இவற்றின் கொள்ளளவு 17GB வரை உள்ளது.இரண்டு பக்கமும் வாசிக்கவோ எழுதவோ முடியும். அட்டவணை உங்களுக்கு இது பற்றி விளக்கத்தினை தரும்.

ஒரு DVD Writer/ ROM எந்த வகையான Disc களுக்கு இசைவாக்கம் உடையது என்பதை அதனுடைய கையேட்டில் அல்லது பெட்டியில் அறிந்து கொள்ளலாம்.


இங்கு விட்டம் 12cm கொண்டவைகள் சாதாரண DVD இனைக் குறிக்கும். விட்டம் 8cm கொண்டவை Mini DVD இனைக் குறிக்கும். DVD அடிக்கும் வேகம் தெரிவு செய்யப்படும் போது அதற்கு எடுக்கும் நேரங்கள் கருதப்படுகின்றன. இதன் காரணமாக சில வேளைகளில் பிரச்சனை ஏற்படும். காரணம் என்னவெனில் வேகம் கூடினால் சிறிய கோப்புகள் Write செய்யப்படுவது தடை ஏற்படலாம். ஓரளவு நடுத்தரமான வேகத்தில் அடிப்பது நல்லது.

சாதாரண DVD/CD களில் 650nm அலை நீளம் கொண்ட லேசர் கதிர்களால் தரவுகள் வாசிக்கப்படுகின்றன. தற்போது BD ROM களும் அறிமுகமாகியுள்ளன. இவற்றில் 405mm அலை நீளம் கொண்ட நீல லேசர் (Blue Violet) கதிர்கள் பாவிக்கப்படுவதால் கூடிய கொள்ளளவைக் கொண்டதாக இருக்கின்றன.

இந்த BD களில் தற்போது 50 GB கொள்ளளவு கொண்ட Disc கள் வெளி வந்துள்ளன. இவ்வாறே BD– RW களும் வெளி வந்துள்ளன. இந்த BD கள் மிகுந்த வினைத்திறன் கொண்ட வீடியோக்கள், தரவுகள் படிக்கவும் வாசிக்கவும் பயன்படுகின்றன.

தொடர்ச்சி 11ம் பக்கம்

# ஹார்ட்டிஸ்க்கை நல்ல நிலையில் வைத்திருக்க.......!



நாம் பல நாட்கள்ல் நேரம் மற்றும் உழைப்பைப் பயன்படுத்தி உருவாக்கும் பைல்கள் எல்லாம் கணினியின் ஹார்ட் டிஸ்க்கில் வைக்கப்படுகின்றன. ஹார்ட் டிஸ்க் எப்போது காலை வாரும் என்று யாரும் கணிக்க முடியாது. ஹர்ட் டிஸ்க் நல்ல கம்பெனி ஹார்ட் டிஸ்க் எனப் பலர் Backup எடுப்பதே கிடையாது. இவர்களின் ஹார்ட் டிஸ்க் காலை வாரினால் அதோ கதிதான். ஒரு சிலர் குறிப்பிட்ட கால அவகாசத்தில் Backup எடுப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

என்னதான் Backup எடுக்கும் பழக்கம் இருந்தாலும் பலர் இதில் கோட்டை விட்டுவிடுகின்றனர். ஒரு நாள் பணி முடிக்கையில் தொடர்ந்து Backup எடுப்பது கட்டாயம் நாம் செய்ய வேண்டிய பணி ஆகும். இருப்பினும் இன்னொரு வழியிலும் இந்த பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். ஏன் ஹார்ட் டிஸ்க்கை சரியான முறையில் பராமரித்து வரக் கூடாது. அதற்கான சில வழிகளை இங்கு காணலாம்.

ஹார்ட் டிஸ்க் நம் கணினியில் மிக மிக முக்கியமான ஒரு சாதனம் என்பதனை நாம் யாரும் மறுக்க முடியாது. சரியாகக் கவனிக்கப்படாத ஒரு ஹார்ட் டிஸ்க் மூன்று ஆண்டுகள் வரைதான் என்று தெரிய வந்துள்ளது. ஒரு ஹார்ட் டிரைவ் எந்த முன் எச்சரிக்கையுமின்றி கெட்டுப் போகும் என்பது எல்லாரும் அறிந்த உண்மை. இதனால் தான் இதனை நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும் என்பது அவசியமாகிறது.

வழி 1:

1. ஹார்ட் டிரைவில் உள்ள பிழைகளை கண்டறிய வேண்டும். இதற்கு Start >> My Computer சென்று சி டிரைவில் வலது கிளிக் செய்திட வேண்டும். கிடைக்கும் மெனுவில் Properties பிரிவில் கிளிக் செய்திடவும். இதில் பல "ரப்கள்" அடங்கிய விண்டோ கிடைக்கும்.

2. இந்த விண்டோவில் Tools என்னும் Tab னைத் தேர்ந்தெடுக்கவும். பின்னர் Check Now என்ற பட்டனைத் தட்டவும்.

3. பின் இதில் கிடைக்கும் இரண்டு தெரிவுகளிலும் தெரிவு செய்திடவும். பின் ஸ்டார்ட் மெனுவில் கிளிக் செய்திடவும்.

4. Re Start செய்வதற்கு செய்தி வந்தால் Yes கிளிக் செய்திடவும்.

5. இதன் பின் விண்டோஸ் மீள் இயக்கம் ஆகி டிஸ்க் முழுவதையும் பரிசோதனை செய்து பழுதான பைல்களை சரி செய்திடும்.

வழி 2:
ஒரு ஹார்ட் டிஸ்க்கில் பைல்கள் பதியப்பட்டு பின் அழிக்கப்பட்டுப் பின் மீண்டும் பதியப்படுகையில் அங்கு பிராக்மென்டேசன் என்னும் செயல்பாடு மேற்கொள்ளப்படுகிறது. பதியப்படும் பைல் வரிசையாகப் பதியப்படாமல் துண்டு துண்டாக ஆங்காங்கே பதியப்படுகிறது. இதைத்தான் பிராக்மென்டேசன் (fragmentation) என அழைக்கிறார்கள்.

பைல்கள் இவ்வாறு துண்டு துண்டாக அமைக்கப்படுவதால் அந்த பைல்களைப் படித்துக் கொண்டு வருவதற்கு ஹார்ட் டிஸ்க் வழக்கமாக செயல்படுவதைக் காட்டிலும் அதிகமாகச் சுழன்று செயல்பட வேண்டியதுள்ளது. இதனால் கணினி செயல்பாட்டில் தாமதம் ஏற்படுகிறது. ஹார்ட் டிஸ்க் பயன்தரும் காலம் குறைகிறது. இதனைச் சரி செய்திட டிபிராக்மென்டர் என்னும் வசதி விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தில் தரப்பட்டுள்ளது. இந்த டிஸ்க் டிபிராக்மெண்ட் பயன்பாட்டினைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வர கீழ்க்கண்டவாறு செயல்படவும்.

1. Start >> My Computer செல்லவும். சி டிரைவில் வலது கிளிக் செய்திட வேண்டும். Properties பிரிவில் கிளிக் செய்திடவும். இதில் பல "ரப்கள்" அடங்கிய விண்டோ கிடைக்கும்.

2. இந்த விண்டோவில் Tools என்னும் Tab னைத் தேர்ந்தெடுக்கவும். பின்னர் Defragment Now என்ற பட்டனைத் தட்டவும்.

3. இனி டிரைவ் அனலைஸ் செய்யப்படும். இதன் பின்னர் Defragment என்பதில் தட்டவும்.

4. இந்த செயல்பாட்டினை மாதம் ஒரு முறையாவது உங்கள் ஹார்ட் டிரைவில் மேற்கொள்ள வேண்டும்.

மேலே குறிப்பிட்ட செயல்பாடுகளை குறிப்பிட்ட கால அவகாசத்தில் மேற்கொண்டால் ஹார்ட் டிஸ்க்கின் வாழ் நாள் கூடுதலாக இருக்கும்.

## உலகின் முதலாவது சுட்டி (மௌஸ்)


கணினியில் உள்ளீடு செய்வதற்கு பிரதானமானதாகவிளங்கவும் ,கணினியை முதன்முதலாக உபயோகிப்போருக்கு சிம்மசொப்பனமாக விளங்குவதுமான மௌஸ் என சொல்லப்படுகின்ற சுட்டியினை முதன்முதலாக 1963 காலப்பகுதியில் டக்ளஸ் ஏன்ஜல்பார்ட்( Douglas Engelbart)என்பவர் கண்டுபிடித்தார். ஆரம்பத்தில் மரத்திலான மேற்புறத்தினைத்தான் கொண்டிருந்ததாம் பின்னர் இது ஸ்ரான்ட்பொர்ட் இன்ஸ்ரிரியுட்டில் நவீனமயப்படுத்தப்பட்டது!

**டயலொக ஃபோன் பாவனையாளர்களுக்கு..... அழைத்து பாருங்க**

| | |
|---|---|
| #141# - Star points | #356# - Request Call( Free Call) |
| #132# - Check Ownership | 678 -Value Added Service |
| #678# - Blaster Pakage | 456 -Bill Check |

# விண்டோஸ் 7

-மூலம்: எழில்நிலா.கொம்-




அதோ இதோ என்று பலமுறை ஒத்தி போடப்பட்ட மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் அடுத்த இயங்குதளம் (ஒப்பரேட்டிங் சிஸ்டம்) இந்த ஆண்டில் நிச்சயம் வர இருக்கிறது. சோதனைக்கு அனுப்பப்பட்ட இதன் சில பதிப்புகளை இயக்கிப் பார்க்க சந்தர்ப்பம் கிடைத்தது. தற்போது நடைமுறையில் உள்ளதாகக் கருதப்படும் விண்டோஸ் விஸ்டா பல நிலைகளில் தோல்வியைச் சந்தித்ததனால் அதன் குறைகளை நிவர்த்தி செய்திடுமா என்ற நோக்கிலேயே விண்டோஸ் 7 இயக்கிப் பார்க்கப்பட்டது. இருப்பினும் விண்டோஸ் 7 தொகுப்பின் இறுதிப் பதிப்பு இன்னும் கிடைக்கவில்லை என்பதால் இதன் புதிய பரிமாணங்கள் சிலவற்றை மட்டும் இங்கு பார்க்கலாம்.

ஒரு பக்கம் விண்டோஸ் விஸ்டாவின் குறைகள். இன்னொரு பக்கம் நாள் தோறும் ஏதேனும் புதிய வசதிகளைத் தொடர்ந்து தந்து கொண்டிருக்கும் லினக்ஸ் இயங்குதளம் என்ற நிலையில் மைக்ரோசொப்ட் நிறுவனம் தன் விண்டோஸ் 7 தொகுப்பை மிகச் சிரமப்பட்டு பல கூடுதல் வசதிகளைத் தர முயற்சித்திருப்பது நன்கு தெரிகிறது. எது எப்படியிருந்த போதிலும் விண்டோஸ் 7 ஆனது விஸ்டாவின் தழுவலாகவே உள்ளது .முதலில் நமக்கு வித்தியாசமாகத் தெரிவது விண்டோஸ் Task Bar தான். இதனை முழுவதுமாக மாற்றி இருக்கிறார்கள்.

Task Bar அருகே மவுஸ் இனை கொண்டு சென்றால் இயங்கும் புரோகிராம்களின் சிறு படங்கள் (Thumbnail)காட்டப்படுகின்றன. விண்டோ ஒன்றினை மேலிருந்து கீழாக, கீழிருந்து மேலாக இழுத்தாலே அது Task Bar இல் சுருங்கிக்கொள்கிறது(Minimize). பக்க வாட்டில் இழுத்தால் அது பெரிய செவ்வகமாக திரையில் நிற்கிறது. விண்டோவின் Task Bar இனை இழுத்து Minimize (சிறிதாக்கல்) மற்றும் Restore (மீள்நிலைப்படுத்தல்)செய்திடலாம். புரோகிறாம் ஒன்றின் Shortcut Icon (குறுக்குவழி அடையாளம்)இன் அம்புக்குறியைக் கிளிக் செய்தால்

அதற்கென ஒரு பாயும் பட்டியல்(Jump list) கிடைக்கிறது. இதிலிருந்து அண்மையில் பயன்படுத்தப்பட்ட அந்த புரோகிராமின் கோப்புக்களுக்கு போகலாம். பயன்படுத்திய கோப்புறைகளுக்கும்(Folder) செல்லலாம்.

வெகுநாட்களாக எந்தவித மாற்றமும் இல்லாமல் நமக்குக் காட்டப்பட்டு வந்த கணிப்பானில் (Calculator) தற்போது பல்வேறு மாற்றங்கள் தரப்படுகின்றன. அலகுமாற்றி, புள்ளிவிவரங்கள் அமைப்பு, கடன் திரும்ப செலுத்துதலைக் கணக்கிடுதல், எரிபொருள் கணக்கிடுதல், சம்பளத்தினை மணிக்கணக்கில் கணக்கிட்டுப் பார்த்தல், இரண்டு தேதிகளுக்கு இடையே எத்தனை நாட்கள் எனக் கணக்கிடுதல் எனப் பல்வேறு புதிய பயனுள்ள அம்சங்கள் கொண்டு வருகிறது. எனவே கணினி பயன்படுத்துபவர்கள் இதனை எப்போதும் இயக்கிய நிலையில் சிறிதாக்கம்(மினிமைஸ்) செய்து தயாராய் வைத்தே கணினியை இயக்குவார்கள் என்பதில் மாற்றமில்லை.

விண்டோஸ் எக்ஸ்புளோரரில் நிறைய மாற்றங்கள் தெரிகிறது. இதன் பக்கவாட்டு பட்டைகள் முற்றிலும் மாற்றப்பட்டுள்ளன. Document போல்டருக்குப் பதிலாக Libraries தரப்பட்டுள்ளது. இதன் மூலம் குறிப்பிட்ட வகையில் (உ-ம் – Word,Jpeg,mp3 போல) அமைக்கப்பட்ட கோப்புக்கள் அனைத்தையும் வரிசையாகக் காணலாம். அதே போல ஒரு கோப்பினை உருவாக்கியவர், தேதி, போன்றவற்றின் அடிப்படையிலும் வகைப்படுத்திக் காணலாம். கட்டுப்பாட்டுப்பகுதியும்(Control panel) முற்றிலும் மாற்றப்பட்டுள்ளது.

**விண்டோஸ் மீடியா பிளேயர் தன் பதிப்பு 12க்கு இதன் மூலம் செல்கிறது. ஊடுருவிச் செல்லும் திரை போல நமக்கு இதன் செயல்பாடு காட்டப்படுகிறது. வலைப்பின்னல் இணைப்பிலும் சிறப்பாகச் செயல்படுகிறது. மொத்தத்தில் மல்ட்டிமீடியா பிரியர்களைக் கவரும் பல அம்சங்கள் இதில் உள்ளன. சோதனைப் பதிப்பு என்பதால் முழுமையாக உள்ளே சென்று இதன் அம்சங்களைக் காண முடியவில்லை. இருப்பினும் மேலும் சில புதிய அம்சங்களை இங்கு சுருக்கமாகக் குறிப்பிடுகிறேன்.**

■Blue-Ray டிஸ்க்குகளில் எழுதவும் படிக்கவும் வசதி தரப்பட்டுள்ளது.

■Bluetooth 2.1 சாதனங்களுக்கு ஓடியோவினை மாற்றும் வசதி

■ரிமோட் கொம்ப்யூட்டிங் வசதி அதிகரிக்கப்பட்டுள்ளது. எளிமையாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உலகின் எந்த மூலையில் இருந்தும் உங்கள் கணினியின் திரையினை நீங்கள் பார்வையிட்டு இயக்கலாம்.

■கணினியை இயக்கம் செய்வதும் நிறுத்தச் செய்வதும் மிகவும் குறைந்த நேரத்தில் அமைகிறது. இது நிச்சயமாய்ப் பலருக்கு சந்தோசத்தினைத் தரும்.

■அதே போல பயனாளர் கணக்கினை இயக்குவதும் எளிதாக்கப்பட்டுள்ளது.

■பென் டிரைவ், கமரா போன்ற இணைத்து எடுத்துவிடுகின்ற சாதனங்களை கணினியில் இருந்து எடுப்பதற்கு ஒரு தளம் தரப்படுகிறது. இதன் மூலம் இவற்றை எடுப்பது எளிதாக்கப்பட்டுள்ளது.

■Backup மற்றும் Restore விசயங்களில் மேலும் மெருகூட்டப்பட்டுள்ளது.

# Jet Audio 7 நல்லதொரு Player

கணினியில் பாடல்களை கேட்பதற்கும் வீடியோ படங்களைப் பார்ப்பதற்கும் ஒலிப்பதிவுகளை மேற்கொள்ளவும் (Recording) CD Write செய்யவும் மற்றும் ஒரு வடிவத்திலிருந்து இன்னுமொருவடிவத்துக்கு ஔி/ஒலிக் கோப்புக்களை மாற்றவும் பயன்படுத்தப்படுகின்ற Jet audio பல்லூடக (Multimedia) மென்பொருளின் புதிய தொகுப்பான JetAudio 7 வெளிவந்திருக்கின்றது. இதனை இலவசமாக இணையத்தில் இருந்து இணையப்பதிவிறக்கம் செய்யமுடியும்.. இந்த மென்பொருள் பற்றிய (Player) மேலதிக தகவல்களை அறியவும் இணையத்தில் இருந்து இறக்கிக் கொள்ளவும் செல்லவேண்டிய தளம் www.jetaudio.com

# இரண்டு Word மந்திரங்கள்

மந்திரம் ஒன்று: MS office word-ல் அல்லது Outlook-ல் மவுசை தொடாமலேயே வெறும் தட்டச்சுபலகையை தட்டி எளிதாக கட்டம் போட்டு அட்டவணை போடும் முறையை இணையத்தளம் ஒன்றில் போட்டிருந்தார்கள் .மிகவும் பிடித்திருந்தது.இங்கே உங்களுக்கும் அறிமுகப்படுத்துகிறேன். இது ரொம்பவும் பழைய கதை என்று சொல்பவர்கள் தயவு செய்து மன்னிக்கவும்.

**Step 1:**

MS office word-ஐ திறநது கிழகணடவாறு கீபோாடில தடடுஙகள

+-----+----------+-----+

**Step 2:** முடிவில Enter-கீ-ஐ அழுததுஙகள கிழகணடவாறு கடடஙகள உருவாகிவிடும.

| | | |
|---|---|---|
| | | |

இபபோது TAB-ஐ அழுததி கிழகணடவாறு இனனும அதிகமான வரிசைகளை கிழ உருவாககிககொளளலாம.

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

இஙகு ' + ' எனற இநத கூடடல குறி கடடஙகளில எலலையையும ' - ' எனற டேஷ குறிகளின எணணிககை வரிசையின நீளததையும குறிககும.பினபு உஙகள வசதிககேறப கடடஙகளை பெரிது சிறிது ஆககிககொளளலாம

ஏதோ ஒரு காரணத்துக்காக ஒரு சாம்பிள் word டொக்கியுமெண்ட் 100 பக்கத்துடன் வேண்டுமா? தேடிக்கொண்டிருக்க வேண்டாம்.ஒரே நொடியில் நீங்களே உருவாக்கிவிடலாம். MS office word-ஐ திறந்து =rand(10>50) என ரைப் செய்து enter-ஐ தட்டுங்கள். ஒரே நொடியில் 50 வரிகளுடன் 10 பந்திகளுடைய ஒரு பெரிய டொக்குயுமெண்ட் ரெடி.

இந்த The quick brown fox jumps over the lazy dog வரிகள் ஆங்கிலத்தின் 26 எழுத்துக்களையும் கொண்டுள்ளதால் எளிதாக உங்கள் Font ஐ சரிபார்த்துக் கொள்ளலாம். இதுமாதிரி எல்லா ஆங்கில எழுத்துக்களையும் கொண்டு எழுதப்படும் வாக்கியத்தை pangram என்பார்கள். முன்பெல்லாம் தட்டச்சு எந்திரத்தின் எல்லா அச்சுகளும் சரியாக வேலை செய்கின்றனவாவென பார்க்க இந்த வாக்கியத்தை முதலில் காகிதத்தில் அடித்து சரி பார்ப்பார்களாம்.

# விசுவல் பேசிக் 6

த.தவரூபன் 09

## திகதி விதிமுறைகள் & திகதி மாறிகள்

மென்பொருள் வடிவமைப்பில் திகதி, நேரம் ஆகியவை மிகவும் முக்கியமானவை. அவற்றின் வடிவங்கள் (Format) விடயத்திலும் அவற்றைக் கட்டுப்படுத்தல், பரிசோதித்தல் செயற்பாடுகளிலும் மிகமிக அவதானத்துடன் இருக்கவேண்டியது அனைத்து மென்பொருள் வடிவமைப்பாளர்களினதும் கடமையாகும்.

இப்படியான திகதிகளைக் கையாள்வதில் ஏற்பட்ட ஒரு பிரச்சினையில் 2000ம் ஆண்டில் உலகளாவிய நெருக்கடி ஏற்பட்டதும் அது பின்னர் சுமூகமாக வெற்றி கொள்ளப்பட்டதும் சகலரும் அறிந்ததே. அது வேறு ஒன்றுமில்லை Y2K என்ற பிரச்சினை. அது நிற்க நாம் இம்முறை திகதிகளை எவ்வாறு மென்பொருள் வடிவமைப்பு விடயத்தில் கையாள்வது என்பதுபற்றி பார்ப்போம்.

நான் இவ்விடயத்தை விசுவல் பேசிக் கணினி மொழியூடாக விளக்க முனைகின்றேன். எல்லாக் கணினி மொழிகளுக்கும் பொதுவான பல விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கும் என்பதை கட்டுரை முடிவில் அறிந்துகொள்வீர்கள்.

### லீப் வருடம்

சரி இனி விடயத்துக்கு வருவோம். பலருக்குத் தெரிந்த லீப் வருடம் பற்றிய விடயத்தினை மட்டுமே மென்பொருள் வடிவமைப்பாளர்கள் கருத்தில் கொள்கின்றார்கள். அதிலும் சில சிக்கல்கள் இருக்கின்றன. ஒவ்வொரு நான்காவது வருடமும் லீப் வருடமே. அதாவது நான்கால் வகுபடக் கூடிய வருடங்கள் யாவும் லீப் வருடமே என்று பலரும் கருதுகின்றார்கள். ஆனால் அது உண்மையில்லை. குறித்த வருடம் 100 இனால் வகுபடுமாயின் அது லீப் வருடமில்லை **எனினும்** அது 400 இனால் வகுபடுமாயின் குறித்த வருடம் 100 இனால் **வகுபட்டாலும்** (மீதமின்றி) அது லீப் வருடமே.

உங்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தும் என்பதற்காக மீண்டும் ஒருமுறை சுருக்கமாக இதனை விபரிக்கின்றேன். "நான்கினால் மீதமின்றி வகுபடுகின்ற, ஆனால் 100 இனால் வகுபடாத வருடங்கள் யாவும் லீப் வருடங்கள். எவ்வாறாயினும் 400 இனால் வகுபடுமாயின் குறித்த வருடம் லீப் வருடமே."

அந்தவகையில் 2004 ஒரு லீப் வருடம். 1900, 2100 ஆகியன லீப் வருடங்கள் அல்ல. சரி லீப் வருடங்களில் என்ன விசேடம்? இது பலருக்கு தெரியும் ஆயினும் குறிப்பிடலாம் என்றே நினைக்கிறேன். அதாவது குறித்த வருடம் லீப் வருடம் எனில் அந்த வருடத்தில் வருகின்ற பெப்ரவரி (2ம் மாதம்) மாதம் 29 நாட்களைக் கொண்டிருக்கும். ஆனால் லீப் வருடமல்லாத சாதாரண வருடமொன்றில் 28 நாட்களே இருக்கும்.

**Date மாறி வரையறுப்பு**

விசுவல் பேசிக்கில் திகதி என்ற மாறிகளை / மாறி வகையினை Date என்ற தகவல் வகை / தரவு வகை (Data type) யினால் வரையறுக்க முடியும்.

அதனை பின்வரும் வகையில் வரையறுக்கலாம்.

```
Dim dtmydate as Date
```

இங்கு dtmydate மாறியின் பெயராகும்.

விசுவல் பேசிக்கில் Date மாறிகளின் அளவு 8 byte களாகும். மேலும் இந்த Date கள் ஜனவரி 100 ம் ஆண்டில் இருந்து டிசம்பர் 9999 ம் ஆண்டுவரை வரையறுக்கப்பட முடியும்.

ஒரு Date மாறிக்கு date உள்ளீட்டை பின்வரும் முறைகளில் உள்ளிட முடியும்.
dtmydate = DateSerial (1998, 2, 12)
அல்லது
dtmydate = #12/2/98#

இங்கு பெப்ரவரி மாதம் 12ம் திகதி உள்ளீடாக வழங்கப்பட்டிருக்கின்றது. DateSerial ( ) என்பது ஒரு முன் வடிவமைக்கப்பட்ட ஃபங்சன் ஆகும். இதில் உள்ளீடாக வழங்கப்படும் இலக்கங்களில் முதலாவது ஆண்டாகவும் இரண்டாவது மாதமாகவும் மூன்றாவது திகதியாகவும் கொண்ட மாறியாக மாற்றப்படும்.

**Date Functions**

இரண்டு திகதிகளுக்கிடையிலான வித்தியாசங்களை கணிப்பதற்கு dateDiff( ) பயன்படுத்தப்படுகின்றது. இதனது வெளியீடு நேர அலகிலோ அல்லது திகதி அலகிலோ கிடைக்கப்பெறலாம். அது பயனாளரின் தெரிவைப் பெறுத்தது.

Testvariable = DateDiff (“d”, Now, #12/1/2010#)
MsgBox Testvariable

இங்கு செய்திப் பெட்டியினூடாக வெளியீடாக இன்றிலிருந்து டிசம்பர் மாதம் 2010 ம் ஆண்டு 1 ம் திகதி வரையுள்ள நாட்களின் எண்ணிக்கை கிடைக்கும். இங்கு “d” என்பது நாட்கள் தேவை என்பதை காட்டுகின்றது.

**Date Add ( )**

இது குறித்த திகதியுடன் குறித்த எண்ணிக்கையான நாட்களை அல்லது மாதங்களை சேர்த்து புதிய திகதியினைப் பெறப்பயன்படுத்தப்படும்.

Testvariable = dateAdd (“m”, 1, CDate (“31 Jan 2000”))
MsgBox Testvariable

இதன் போது செய்திப் பெட்டியினூடான வெளியீடாக 31 Jan 2000 இனுடன் ஒரு மாதம் கூட்டப்பட்டு புதிய திகதி கிடைக்கும். அதாவது பெப்ரவரி 29 2000 இங்கு “m” என்பது மாதத்தைக் காட்டுகின்றது. “d” என குறிப்பிடின் நாளுடன் கூட்டும்

**Month ( )**

இது குறித்த திகதியின் மாதத்தை பெறுவதற்குப் பயன்படுத்தப்படும்.உதாரணம்: Testvariable = Month (date) எனில் இன்றைய மாதத்தின் எண்ணிக்கையிலான இடத்தை Testvarible இன் பெறுமானமாகத் தரும். இவ்வாறே Year(திகதி), Day(திகதி) ஆகிய ஃபங்சன்களும் இருக்கின்றன. அவை முறையே குறித்த திகதியின் வருடத்தையும் நாளையும் தருகின்றன.

**DatePart (“q”, திகதி)**

இங்கு வழங்கப்படக் கூடிய திகதி வருடத்தின் எத்தனையாவது காலாண்டுக்குரியது என கணிக்கப்பட்டு வெளியீடு கிடைக்கும்.
உதாரணம்: testvariable = DatePart (“q”, # 12/1/2003#)
MsgBox Testvariable

இங்கு செய்திப் பெட்டியினூடான வெளியீடாக 4 கிடைக்கும் அதாவது மேற்குறித்த திகதி வருடத்தின் 4ம் காலாண்டுக்குரியது.

**Week day (திகதி)**
இது குறித்த திகதியின் நாளானது குறிப்பிட்ட கிழமையின் எத்தனையாவது நாள் எனத் தரும்

Testvariabe = Weekday (# 5/5/2004 #)
MsgBox Testvariable

செய்திப் பெட்டியினூடான வெளியீடாக 4 கிடைக்கும். அதாவது அது புதன்கிழமையினைக் குறிக்கின்றது.

Date Serial (ஆண்டு, மாதம், திகதி)
இங்கு கொடுக்கப்படும் உள்ளீடுகளைக் கொண்ட திகதி வெளியீடாக கிடைக்கும்.
உதாரணம் Testvariable = dateSerial (1998, 4, 12)
MsgBox Testvariable

வெளியீடு செய்திப் பெட்டியினூடாக 4/12/1998 எனக் கிடைக்கும். இவ்வாறே TimeSerial (மணி, நிமிடம், செக்கன்) என்ற ஃபங்சனும் உண்டு.இங்கு கொடுக்கப்படும் உள்ளீடுகளைக் கொண்ட நேரம் வெளியீடாக கிடைக்கும்.
உதாரணம்: Testvariable = TimeSerial (12, 00, 00)
MsgBox Testvariable

வெளியீடு செய்திப்பெட்டியினூடாக 12:00.00 Pm எனக் கிடைக்கும்.பொதுவாக Date உள்ளீடுகளை பெறும்போது அல்லது வழங்கும் போது அவற்றை திகதி உள்ளீடுதானா என பரிசோதிப்பதற்கும் ஒரு ஃபங்சன் உள்ளது. அது isdate(திகதி) ஆகும்.இங்கு உள்ளீடு என நாம் கருதுவதை அல்லது கொடுக்க விரும்புவதை இட்டுப் பரிசோதிக்கலாம். இங்கு வெளியீடாக True அல்லது False கிடைக்கும்.
உதாரணம் Testvariable = isdate (# 1/1/2004 #)
MsgBox Testvariable

இதில் வெளியீடாக True கிடைக்கும்.

---

# கருத்துக்களம்: இதுவே தருணம் - தவா

பாடசாலைகளில் ஸ்கூல்நெற் வலையமைப்பினை பற்றி கூறியிருப்பார்கள் இது மாணவர்களுக்கும் பாடசாலைசமூகத்தினருக்கும் வழங்கப்படுகின்ற இணையவசதியாகும்.இதனைபெற்றுக்கொள்ளாத பாடசாலைகள்(பாடத்திட்டத்தில் கணினியை பாடமாக கொண்ட மாணவர்கள் கொண்டவை) பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளில் இறங்கவேண்டும் அத்ததுடன் பெற்றுக் கொண்ட பாடசாலைகள் மாணவர்களுக்கு சரியான நிர்வாக கட்டுப்பாடுகளுடன் பாவனைக்கு விடவேண்டும்

வெறுமனே பரீட்சை வினாத்தாள்களை தயாரிப்பதற்கும் அலுவலக வேலைகளுக்கும் மட்டுமே கணினி அலகினை பாவிப்பதை நிறுத்தவேண்டும். மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாவைனையின்போது கட்டப்படுத்துவது கடினம் என்பதற்காக கணினி அலகினை மட்டுப்படுத்துவது அழகான விடயமல்ல ஒவ்வொரு கணினி அலகும் துறைசார்ந்த ஆளனி மற்றும் ஆசிரியரினால் நிரவகிக்கப்படுவது அவற்றுக்கெல்லாம் தீர்வாக அமையும் என நான் நினைக்கின்றேன் அவ்வாளனி அல்லாத பாடசாலைகள் அவற்றினை பெற்றுக்கொள்வதற்கான உச்ச நடவடிக்கையில் இறங்க இதுவே தருணம்.இந்நிலையில் சரியான முறையில் கணினி அலகுககளை நிர்வகிக்கும் ஒருசில பாடசாலைகளுக்கு வாழ்த்துக்கள். **www.schoolnet.lk**




**முன்னைய இதழ்கள்**

மைக்கொம்யூட்டர் சஞ்சிகையின் முன்னைய இதழ்கள் (1-8) எம்மிடம் சொற்ப அளவில் கையிருப்பில் உள்ளன. பெற்றுக் கொள்வதற்கு அலுவலகத்துடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும்

## கொம்யூட்டர்ஜி பதில்கள்

தகவல் தொழிநுட்பம் சம்பந்தமாகவும் கணினி மற்றும் அதன் பயன்பாடுகள் சம்பந்தமாகவும் உங்களுக்கு எழும் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள் கொம்யூட்டர்ஜி பதில்கள் பகுதியில் பதிலளிக்கப்படும் எஸ் எம் எஸ் ஊடாக வரும் கேள்விகளுக்கு ஒருபோதும் உடனடியாக பதில் அனுப்பப்பட மாட்டாது

## கருத்துப்பெட்டி Email:editor@mycomputertamil.info

சஞ்சிகையில் வெளி வருகின்ற படைப்புக்கள் பற்றி உங்கள் கருத்துக்களை **0602021500** என்ற இலக்கத்திற்கு SMS ஊடாகவும் அனுப்பலாம். மின்னஞ்சல் ஊடாகவும் அனுப்பிவைக்கலாம் உங்கள் கருத்துக்களே எம்மை மேலும் ஊக்கப் படுத்தும்

கருத்து மடல்கள் குறுஞ்செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் எமது நன்றிகள் உங்களிடமிருந்து ஆக்கங்களும் வரவேற்கப்படுகின்றன ஆ-ர்

# இணையத்தளமில்லாமல் ஒரு நிறுவனமா? நிச்சயம் இனி சாத்தியமில்லை! இன்றே உங்களுக்கான இணையத்தளத்தினை எம்மிடம் அமைத்துக்கொள்ளுங்கள்

எம்மால் வடிவமைக்கப்படும் தளங்களுக்கு ஒரு வருடம் இலவச பராமரிப்பு!



உலகளாவிய ரீதியில்
பல நூற்றுக்கணக்கிலான
தளங்களை நிறுவிய சாதனை
இணைய உலகில் 6 வருட முன்னோடிகள்



## .com .net .org .lk .biz .uk

என எதுவானாலும் ஒரேநாளில் பதிவு

- ☆Unlimited Band with
- ☆Windows/Linux Servers
- ☆Hosting Control Panel
- ☆PHP/ ASP.net/JSP Support
- ☆OpenSource Applications
- ☆MYSQL/MSSQL/MSAccess DBs

24/7 வாடிக்கையாளர் சேவை

அமெரிக்க இங்கிலாந்து நாடுகளில் உள்ள எமது சேவர்களில்

**200 எம்பி தொடக்கம் விரும்பிய வரை கொள்ளளவு**

கவர்ச்சிகரமான வடிவமைப்பு பாதுகாப்பான தொழில்நுட்பம் தேடுபொறியினுள் அகப்படும் வகையிலானது வேகமானது என எமது வடிவமைப்பின் சிறப்பு ஆனது எம்மால் வடிவமைக்கப்பட்ட இணையத்தளங்களின் ஊடாக கண்டறியப்படலாம் நீங்கள் குறைந்த செலவில் சிறந்த தளத்தை வடிவமைக்க விரும்பின் இன்றே எம்மை நாடுங்கள்

வடிவமைக்கப்பட்ட முக்கிய தளங்கள் சில இவை! ஏனையவற்றினை எமது இணையத்தளத்தில் காணவும்

| சேவை பெற்ற நிறுவனங்கள் | அவற்றின் இணையத்தளங்கள் |
| --- | --- |
| வடமாகாண காசநோய் தடுப்பு சங்கம் | -> www.tuberculosisjaffna.com |
| இந்துசாதனம் | -> www.hinduorgan.com |
| பருத்தித்துறை பிரதேச செயலகம் | -> www.dsppd.org |
| அறவழிபோராட்டக்குழு | -> www.nvdag.org |
| லங்காஆயுர்வேத மருத்துவக்கல்லூரி | -> www.lankasiddhaayur.com |
| யாழ் மிட்டவுண் றோட்டரக்டகழகம் | -> www.jaffnamidtown.org |
| மருதடிப்பிள்ளையார் | -> www.manipaymaruthady.com |
| கரிகணன்பிரிண்டேர்ஸ் | -> www.harikanan.com |
| யாழ் இந்துக்கல்லூரி | -> www.jhc.lk |
| நயினை நாகபூஷணி அம்மன் | -> www.nainainagapooshani.com |
| நல்லூர் பிரதேச சபை | -> www.nallurps.org |

Domain Registration From Rs 1000 per Year
Web Hosting from Rs 1000 per Year

தளவடிவமைப்பு ரூ 5000 தொடக்கம்




எமது ஏனைய சேவைகள்: கணினி திருத்தவேலைகள்,அன்ரிவைரஸ் தீர்வுகள்,உயர் கணினி வகுப்புக்கள், நெற்வேக்கிங் ,புதிய கணினி மற்றும் உதிரிப்பாக விற்பனை, இணைய விளம்பரம்,டிஜிரல் டிசைனிங்,ஈமெயி

## SPEED IT NET

"The Quick way to Online"

www.speeditnet.com

72/28 பணிக்கர் லேன் பலாலிவீதி உட்புறம் திருநெல்வேலி சந்தி திருநெல்வேலி யாழ்ப்பாணம்

Telephone: 021 222 8358 /0214591871

web: www.speeditnet.com